

# இந்தியாவுடனான வர்த்தகத்தை விருத்தி செய்தல்

## இசைவு மதிப்பீட்டில் பரஸ்பர அங்கீகாரம்

# இந்தியாவுடனான வர்த்தகத்தை விருத்தி செய்தல்

## இசைவு மதிப்பீட்டில் பரஸ்பர அங்கீகாரம்

ஜனவரி மாதம் 2016

இலங்கை பழவகை மற்றும் மரக்கறி உற்பத்தியாளர், பதனிடுவோர் மற்றும் ஏற்றுமதியாளர் சங்கம் (LFVPPEA) மற்றும் தேசிய ஏற்றுமதியாளர் சங்கம் (NCE) ஆகியவற்றின் ஆதரவோடு வெறிட்டே ரிசேர்ச் நிறுவனத்தினால் இந் நிலைமைப் பத்திரம் தொகுக்கப்பட்டது. இந்த ஆய்வில் வழிகாட்டல் வழங்கியும் நேர்முகங்களுக்கு வசதியேற்படுத்தியும் கலந்துரையாடல் நிகழ்வுகளில் பங்குபற்றியும் அவர்கள் வழங்கிய தொழல்நுட்ப ஆலோசனைகளுக்காக LFVPPEA மற்றும் NCE ஆகியவற்றுக்கு வெரீட்டே ரிசேர்ச் (VR) நன்றி தெரிவிக்க விரும்புகிறது.

வெரீட்டே ரிசேர்ச் நிறுவனத்தின் பொருளாதார குழாம் இந்த ஆய்வை தொகுத்தது. இக்குழாத்தில் வித்யா நெத்தேனியல் மற்றும் ஹஸ்னா முனாஸ் ஆகியோர் அடங்கியிருந்தனர். சுபாஷினி அபேசிங்க(பொருளியல் ஆய்வு பிரிவுத் தலைவர்) மற்றும் மாலதி நைட் ஆகியோர் ஒட்டுமொத்தஆய்வு மற்றும் பதிப்பாசிரிய மேற்பார்வை மேற்கொண்டனர்.

அட்டைப்பட அனுசரணை போல் லாஷின (www.unifeeder.com)

ஆசியாவில் சமூக அபிவிருத்திக்கான கலந்துரையாடல்களையும் கல்வியையும் ஊக்குவிக்கும் அதேவளை, இப்பிராந்தியத்தில் பேச்சுவார்த்தைகளுக்கான தகவல்களையும் பகுப்பாய்வுகளையும் வழங்குவதில் ஒரு முன்னணி நிறுவனமாகத் திகழ்வதை வெரிட்டே ரிசேர்ச் இலக்காகக் கொண்டுள்ளது. பொருளியல், சமூகவியல், அரசியல், சட்டம் மற்றும் ஊடகம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சிக்கும் கலந்துரையாடலுக்கும் இந் நிறுவனம் முனைப்புடன் பங்களிப்புச் செய்வதோடு, தரவு சேகரித்தல், தகவல் உறுதிப்படுத்தல், மூலோபாய அபிவிருத்தி மற்றும் தீர்மானப் பகுப்பாய்வு ஆகியவற்றில் சேவைகளையும் வழங்குகிறது.

மின்னஞ்சல் கருத்துகளை: publications@veriteresearch.org முகவரிக்கு அனுப்பவும்.

பதிப்புரிமை © 2016 வெரீட்டே ரிசேர்ச் பிரைவேட் லிமிட்டெட்.

புதிப்புரிமை இந்நிறுவனத்திற்கே. குறிப்பிடப்பட்ட பெறுநரைத் தவிர வெரீட்டே ரிசேர்ச் பிரைவேட் லிமிட்டெட் இன் சம்மதமின்றி மற்றவர்களுக்கு விநியோகிக்கபடலாகாது.

# பொருளடக்கம்

பொருளடக்கம் .... 2
அட்டவணைப் பட்டியல் .... 3
உருக்கலின் பட்டடியல் .... 3
சொற்சுருக்கம் .... 4
நிறைவேற்றுச் சுருக்கம் .... 6
அறிமுகம் .... 6
பிரச்சினைகள் .... 6
பரிந்துரைகள் .... 8
முறையியலும் மட்டுப்பாடுகளும் .... 8
முறையியல் .... 8
மட்டுப்பாடுகள் .... 9
அறிமுகம் .... 10
பிரிவு I - இந்தியவிற்கும் இலங்கைக்குமிடையிலான உணவு வர்த்தகத்தின்மீதான NTB கனின் தாக்கம் .... 13
1.1. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்: வர்த்தகத்தின்மீதான தாக்கம் .... 13
1.2. தரநியமங்கள் தேவையா, அவை வர்த்தகத்தைத் தடுக்கின்றனவா? .... 14
1.3. விடய ஆய்வு: இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான உணவு ஏற்றுமதிகள் .... 16
1.3.1. இந்தியாவுடன் உணவு ஏற்றுமதிகளிலான வர்த்தகம்: ஒரு மீளாய்வு .... 16
1.3.2. CAP கள்: உணவு ஏற்றுமதிக்கான ஒரு NTB .... 19
1.4. இயைந்தொழுகலுக்கு வசதியேற்படுத்த இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தற்போதிருக்கும் ஒப்பந்தங்கள்: .... 21
பிரிவு II- இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTB க்களை தீர்ப்பதற்கான உத்தேச தீர்வுகள். .... 23
2.1. தரநியமங்களின் இசைவாக்கல் .... 24
2.2. ஒத்ததன்மை ஒப்பந்தங்கள் .... 26
2.3. வெளிநாட்டுத் தயாரிப்பாளர்களை ஏற்றங்கீகரித்தல்: .... 27
2.4. இசைவு மதிப்பீட்டு நடைமுறையின் பரஸ்பர அங்கீகாரம் (CAPs) .... 28
பிரிவு III– முன்னோக்கிய பாதை .... 32
3.1. இந்தியாவுடனான CAP கள் தொடர்பான ஒரு MRA ஏன் “மிகச்சிறந்த” தீர்வு .... 32
3.2. CAP கள் தொடர்பான ஒரு MRA எவ்வாறு செயற்படும்? .... 33
3.3. அமுலாக்கதிற்கான பரிந்துரைகள் .... 35
3.3.1. உத்தேச CEPA விலிருந்து MRA யைப் பிறித்தெடுத்தல் .... 35
3.3.2. அமுலாக்கத்திற்கு படிப்படியான அணுகுமுறையொன்றைப் பின்பற்றுக .... 37
3.3.3. ஒரு ஏற்றுமதிப் பரிசோதனைத் திட்டத்தை / அமைப்பைத் தாபித்தல் .... 42
முடிவுரை .... 45

# அட்டவணைப் பட்டியல்

அட்டவணை 1: இலங்கையில் உணவுப் பொருட்களுக்குப் பிரயோகிக்கப்படும் தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் .... 40
அட்டவணை 2: இந்தியாவில் உணவுப்பொருட்களுக்குபி பிரயோகிக்கப்படும் தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் .... 41

# உருக்கலின் பட்டியல்

உரு 1: இலங்கையிலிருந்து இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் (2000 – 2014) .... 14
உரு 2: இலங்கையிலிருந்து இந்தியவிற்கும் உலகிற்குமான பதனிடப்பட் உணவுப் பொருள் ஏற்றுமதிகள் .... 18
உரு 3: முன்மொழியப்பட்ட தீர்வுகளின் பலமும் பலவீனமும .... 31
உரு 4: இந்தியாவிற்கும் இலங்ககைக்குமிடையிலான CAP கள் தொடர்பான ஒரு MRA க்கான உத்தேச கட்டமைப்பு .... 34
உரு 5: இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான CAP கள் தொடர்பான MRA ஒன்றிற்கான கட்டம் கட்டமான அணுகுமுறை .... 37
உரு 6: இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான ஆசுயு ஒன்றின் படிப்படியான அமுலாக்கமுறை .... 37
உரு 7: வர்த்தகத்திற்கான முன்னுரிமைப்பொருட்களின் தெரிவிற்கான எடுகோள் .... 39
உரு 8: இந்தியவிற்கும் இலங்கைக்குமிடையிலான ஊயுீகள் தொடர்பான ஊயுடீ களின் தொழிற்பாடு .... 42

# சொற்சுருக்கம்

| | |
|---|---|
| AFAS | அவுஸ்திரேலிய நுளம்புப்புகையூட்டல் அங்கீகரிப்புத் திட்டம் |
| APEC | ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு |
| APLAC | ஆசிய பசுபிக் ஆய்வுகூட அங்கீகரிப்புப் பேரவை |
| AQCS | மிருக தனிமைப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல் சேவை |
| AQIS | அவுஸ்திரேலிய தனிமைப்படுத்தல் மற்றும் பரிசோதனைச் சேவை |
| AQSIQ | மக்கள் சீனக் குடியரசின் தர மேற்பார்வை, பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தல் பொது நிர்வாகம் |
| ASEAN | தென்கிழக்காசிய நாடுகள் சங்கம் |
| BAFRA | பூட்டான் விவசாய மற்றும் உணவு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை |
| BIS | இந்தியதரக் கட்டுப்பாட்டுப் பணியகம் |
| CAB | இசைவு மதிப்பீட்டு நிறுவனம் |
| CAP | இசைவு மதிப்பீட்டு நடைமுறை |
| CECA | விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் |
| CEPA | விரிவான பொருளாதார பங்குடமை ஒப்பந்தம் |
| DAH | இந்திய அரசாங்கத்தின் விலங்கு வேளாண்மை, பாற்பண்ணை மற்றும் மீனபிடித் திணைக்களம் |
| DAPH | மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் - இலங்கை. |
| DPQS | இந்திய அரசாங்கத்தின் தாவரப் பாதுகாப்பு, தனிமைப்படுததல் மற்றும் சேமித்தல் பணியகம் |
| EIA | ஏற்றுமதி பரிசோதனை நிறுவனம் |
| EDB | இலங்கை ஏற்றுமதி அபிவிருத்ததச் சபை |
| EIC | இந்திய ஏற்றுமதி பரிசோதனை சபை |
| EMC | மின்காந்த இசைவு |
| EU | ஐரோப்பிய ஒன்றியம் |
| FSSAI | உணுவுப் பாதுகாப்பு தர அதிகார சபை |
| FTA | சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் |
| IIS | இறக்குமதி பரிசோதனைத் திட்டம் |
| ILAC | சர்வதேச ஆய்வுகூட அங்கீகரிப்பு ஒத்துழைப்பு |
| ISFTA | இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் |
| INR | இந்திய ரூபா |
| ITI | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் |
| JAS | ஜப்பானிய விவசாய தரங்கள் |

| | |
|---|---|
| LFVPPEA | இலங்கை பழவகை மற்றும் மரக்கறி உற்பத்தியாளர், பதனிடுவோர் மற்றும் ஏற்றுமதியாளர் சங்கம் |
| MAFF | ஜப்பான் அரசாங்கத்தின் விவசாய, வன மற்றும் மீன்பிடி அமைச்சு |
| MAPA | பிரேசில் சமஸ்டிக் குடியரசின் விவசாய, கால்நடை மற்றும் உணவு வழங்கல் அமைச்சு |
| MFN | மிகவும் விரும்பப்படும் நாடு |
| MoU | புரிந்துணர்வு ஒப்பந்தம் |
| MRA | பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தம் |
| NAB | தேசிய அங்கீகரிப்புச் சபை |
| NABL | இந்திய அரசாங்க, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் திணைக்கத்தின் பரிசீலனை மற்றும் கெலிபரேஷன் ஆய்வுகூடத்திற்கான தேசிய அங்கீகரிப்புச் சபை |
| NOP | தேசிய சேதன நிகழ்ச்சித்திட்டம் |
| NCE | தேசிய ஏற்றுமதியாளர் சங்கம் |
| NPQS | இலங்கை தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவைகள் |
| NTB | வரி அல்லாத தடை |
| OECD | பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்ததிக்கான நிறுவனம் |
| RCA | வெளிப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு அனுகூலம் |
| QI | தர உட்கட்டமைப்பு |
| RITP | சுட்டிக்காட்டும் வர்த்த சாத்தியவாய்ப்பு |
| SLAB | இலங்கைஅங்கீகரிப்புச் சபை |
| SLSI | இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் |
| SPS | துாய்மை மற்றும் தாவரத் துாய்மை |
| TBT | வர்தகத்துக்கான தொழில்நுட்பத் தடைகள் |
| USA | ஐக்கிய அமெரிக்கா |
| USDA | ஐக்கிய அமெரிக்க விவசாயத் திணைக்களம் |
| USFDA | ஐக்கிய அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் |
| WTO | உலக வர்த்தக ஒப்பந்தம் |

# நிறைவேற்றுச் சுருக்கம்

## அறிமுகம்

பொதுவாக அனைத்து நாடுகளும் நுகர்வோரைப் பாதுகாத்தல் அத்துடன் சூழல், தாவரங்கள் மற்றும் விலங்கு வாழ்க்கை ஆகியவற்றை பாதுகாத்தல் என்பன சம்பந்தமாக சட்டபூர்வ பொதுக் கொள்கை இலக்குகளை அடையும் நோக்கில் உற்பத்தித் தர நியமங்கள் மற்றும் கட்டுப்பாடுகளைப் பேணுகின்றன. உரிய தரநியமங்களோடும் ஒழுங்குவிதிகளோடும் இயைந்தொழுகுவதை உறுதிப்படுத்த உற்பத்திப் பொருட்களின்மீது இசைவு மதிப்பீட்டு நடைமுறைகள் (CAP) பிரயோகிக்கப்படுகின்றன. எனினும், இயைந்தொழுகலை நிரூபிப்பதற்கு ஆகும் காலமும் செலவும் நியாயமற்றதாக இருக்குமாயின், CAP தொடர்பான இத்தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் வர்த்தகத்திற்கு ஒரு தேவையற்ற தடையாக மாறக்கூடும். எனவே, வர்த்தகத்தை மேம்படுத்துமுகமாக இத்தகைய வரி அல்லாத தடைகளை (Non Tariff Barriers) அகற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது முக்கியமானதாகும்.

வரி அல்லாத தடைகள் (NTBs) இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகத்தைப் பாதிக்கும் முக்கிய காரணியாக கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டிலிருந்து இவ்விரு நாடுகளும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றைக் (Free Trade Agreement) கொண்டிருந்தும் இந்நிலைமை நிலவுகிறது. வரித் தடைகள் தவிர்ந்த கோட்டா கட்டுப்பாடுகள், தொல்லைமிக்கதும் வினைத்திறனற்றதுமான எல்லை நடைமுறைகள், விதிகளினதும் ஒழுங்குவிதிகளினதும் முறையற்ற பிரயோகம் மற்றும் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறலுமின்மை போன்ற வர்த்தகத்திற்கான எனைய அனைத்து வகையான தடைகளும் NTB கள் ஆகும். இத்தகைய NTB கள் வர்த்தகம் புரிவதின் செலவை அதிகரித்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை உள்நாட்டுப் உற்பத்திகளோடு ஒப்பிடுகையில் போட்டித்தன்மையற்றதாக்குகிறது. இதன் விளைவாக, முற்றாக வரிச்சலுகை வழங்கப்பட்டும் இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் அதன் சாத்தியவாய்ப்பிற்கு வெகு தொலைவு தாழ்வாகவே உள்ளது.

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான உணவு வர்த்தகத்திற்கு முட்டுக்கட்டையாக அமையும் இயைந்தொழுகல் தொடர்புபட்ட தடைகளைப் புரிந்துகொள்வதிலும் இனங்காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சாத்தியமான தீர்வுகளைக் கண்டறிவதிலும் இந்த ஆய்வு கவனஞ்செலுத்துகிறது.

## பிரச்சினைகள்

வர்த்தகத்திற்குத் தடையாக அமைவதாக இலங்கை ஏற்றுமதியாளர்களால் கோடிட்டுக் காட்டப்படும் குறிப்பிடத்தகுந்ததொரு NTB இந்தியாவில் நுழைவுத் துறைமுகங்களில் எதிர்நோக்கப்படும் இயைந்தொழுகல் தொடர்புபட்ட பிரச்சினையாகும். ஒரு சில பொருட்களுக்கு இந்தியாவிற்கு வெளியே உள்ள இசைவு மதிப்பீட்டு அமைப்புகளினால் (CAB) வழங்கப்படும் சான்றுப்பத்திரங்களை இந்தியா ஏற்றுக்கொள்ளாததாலேயே இப்பிரச்சினை எழுகிறது. நுழைவு மையங்களில் இந்திய தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு இசைவாக உள்ளனவா என்பதை மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு பொதியையும் இந்திய அதிகாரிகள் சோதனை செய்கின்றனர். இதன் விளைவாக ஏற்படும் தாமதம், நிச்சயமற்றதன்மை மற்றும் களஞ்சியப்படுத்தல் செலவு மற்றும் தண்டச் செலவு முதலிய மேலதிக செலவுகள் ஆகியன இந்தியாவுடனான வர்தகத்திற்கு ஒரு தடையாக அமைகின்றன.

இந்தியாவிற்கான பதனிடப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதிகள் ஆனது இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTB களின் அங்கீகரிப்பைப் புரிந்துகொள்வதற்கு பயன்மிக்கதொரு விடய ஆய்வாகும். உணவு இறக்குமதிகள்மீது இந்தியா விதிக்கும் சராசரி வரி 30% த்திற்கு மேலாகும். சில பொருட்களுக்கான வரி 100% - 150% அளவு உயர்வானதாக உள்ளது. இவ்வாறு, HS அத்தியாயம் 16-21 வரையானவற்றிற்கமைய இந்தியாவிற்கான ஏற்றுமதிகளுக்கான இலங்கயைின் சுதந்திர வர்த்தகப் பிரவேச வாய்ப்பு இந்திய

சந்தையில் ஏனைய நாடுகளிலிருந்தான இறக்குமதிகளைவிட போட்டித்தன்னையில் கணிசமானளவு அனுகூலத்தைக் கொண்டுள்ளது.

இந்த அனுகூலங்கள் இருந்தும், இந்தியாவிற்கான ஏற்றுமதிகளில் ஆரம்பத்திலிருந்த வளர்ச்சி அலையைப் பேணுவது சவால்மிக்கதாக உள்ளது. உதாரணமாக, இந்தியாவிற்கான பதனிடப்பட்ட உணவு ஏற்றுமதி 2005 – 2011 காலப்பகுதியில் US$ 7 மில்லியனிலிருந்து US$28 மில்லியனாக வளர்ச்சியுற்றது. ஒப்பீட்டளவில், உலகிற்கான பதனிடப்பட்ட உணவு ஏற்றுமி 2001 லிருந்த US$ 22.5 மில்லியனிலிருந்து 2011 இல் US$ 178 மில்லியனுக்கு உறுதியாக வளர்ச்சியடைந்து பின்னர் 2014 இல் US$ 175 ஆக சிறிது வீழ்ச்சியுற்றது. பதனிடப்பட்ட உணவு ஏற்றுமதியாளர்கள் ஒவ்வொரு பொதியையும் மாதிரி சோதனையிடும் முறைமை, களஞ்சியப்படுத்தல் செலவு மற்றும் எதிர்வுகூறமுடியாததும் நீண்டகாலம் எடுக்கும் சோதனை நடைமுறைகள் என்பனவற்றை இந்தியாவிற்கான பிரவேசத்தில் நிலவும் தடைகளாகக் காண்கின்றனர். மேலும், இதன் விளைவாக ஏற்படும் எதிர்வுகூறமுடியாத்தன்மை, காலவிரயம் மற்றும் செலவு ஆகியவற்றின் காரணமாக கொள்வனவாளர்களைத் தேடிப்பிடிப்பதும் பின்னர் அவர்களைத் தக்க வைத்துக்கொள்வதும் சிரமமாக உள்ளது.

CAP களிலிருந்து ஏற்படும் NTB களை தீர்ப்பதற்கு இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே தற்போதிருக்கும் இரண்டு ஒப்பந்தங்கள் இப்பிரச்சினையைத் தீர்க்கத் தவறிவிட்டன. இந்திய ஏற்றுமதி பரிசோதனைச் சபைக்கும் (EIC) இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனதிற்குமிடையே (SLSI) 2002 இல் செய்துகொள்ளப்பட்ட முதலாவது ஒப்பந்தம் குறித்துரைக்கப்பட்ட பொருட்கள் (50 உணவுப் பொருட்கள் அடங்கலாக) எழுமாறான சோதனைகளுக்கு மேலதிகமாக பொதிரீதியான கூடுதல் சோதனைகளுக்குள்ளாகாமல் இலங்கை சந்தைகளுக்குள் பிரவேசிக்க அனுமதித்தது. இந்த விதிவிலக்கு இலங்கை SLSI தரங்களுக்கு அமைவானதென EIC ஆய்வுகூடங்களினால் சான்றுப்படுததப்பட்ட இந்திய இறக்குமதிப் பொருட்களுக்கு வழங்கப்பட்டது. இதே சலுகை இந்திய சந்தைகளுக்குள் பிரவேசிக்கும் இலங்கைப் பொருட்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்பவர்களுக்கே இவ்வொப்பந்தம் பயனளிக்கிறது.

2006 ஆம் ஆண்டு SLSI விற்கும் இந்திய தரப் பணியகத்திற்கும் (BIS) இடையே செய்துகொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தம் இவ்விரு நிறுவனங்களும் ஒன்று மற்றதன் தரங்களுக்கமைய சோதனை மேற்கொள்வதற்கும் மாதிரிகளை சான்றுப்படுத்துவதற்குமான இயலுமையை அங்கீகரித்தது. தரநியமங்கள் இசைவுபடுத்தப்படும்விடத்து, அரசுகள் ஒன்று மற்றதன் பரிசோதனையையும் சோதனை அறிக்கையையும் ஏற்றுக்கொள்ளுமெனவும் இவ்வொப்பந்தம் ஏற்பாடு செய்கிறது. எனினும், இவ்வொப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கான எவ்வித நகர்வுகளும் இல்லை. மேலும், இசைவுபடுத்தும் தரநியமங்கள் தொல்லைமிக்கதாகவும் நீண்ட நடைமுறைகளைக் கொண்டதாகவும் உள்ளன.

SLSI மற்றும் BIS ஆகியவற்றின் கீழ் வரும் பொருள் தரநியமங்கள் தொடர்பாக எழும் இயைந்தொழுகல் தொடர்புபட்ட பிரச்சினைகளை மாத்திரம் தீர்ப்பதிலேயே இவ்விரு ஒப்பந்தங்களும் கூடிய கவனம் செலுத்துவது இன்னொரு குறைபாடாகும். SLSI மற்றும் BIS ஆகியவற்றுக்கு மேலதிகமாக, வேறு அரசாங்க நிறுவனங்களும் வேறு பலவித ஒழுங்குபடுத்தல் தரநியமங்களைக்கொண்டு பொருட்களின் இயைந்தொழுகலைப் பரிசோதிப்பதற்குப் பொறுப்பாக உள்ளன என்பதை ஏற்றுமதியாளர்களின் அனுபவங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. எனவே, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரநியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கும் விதமான ஒரு ஒப்பந்தம் முக்கியமாகும்.

இறக்குமதிக் கட்டத்தில் ஏற்படும் இயைந்தொழுகல் தொடர்புபட்ட செலவுகளும் தாமதங்களும் இலங்கை மட்டும் எதிர்கொள்கின்ற ஒரு பிரச்சினை அல்ல. இது, பல நாடுகள் எதிர்கொள்ளும் வர்த்தகத்துக்கான தரநியமங்கள் தொடர்புபட்ட பொதுவான பிரச்சினையாகும். இப்பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு வெவ்வேறு நாடுகள் தரநியமங்களை இசைவுபடுத்துவதற்கான ஒப்பந்தங்கள், ஒத்தநிலை ஒப்பந்தங்கள் (பரஸ்பர தர அங்கீகரிப்பு என்றும் குறிப்பிடப்படும்) மற்றும் இசைவு மதிப்பீட்டு நடைமுறைகள் (CAP)

தொடர்பான பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தங்கள் (MRA) போன்ற பல்வேறு வகையான ஒப்பந்தகள் செய்துகொண்டுள்ளன.

## பரிந்துரைகள்

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகத்திற்கு முட்டுக்கட்டையாகவிருக்கும் இயைந்தொழுகல் தொடர்புபட்ட தடைகளை அகற்றுவதற்கான மிவும் பயனுள்ளதும் நடைமுறைப்படுத்தக்கூடியதுமான தீர்வு CAP கள் தொடர்பான MRA களை கைச்சாத்திடுவாதாகும் என இந்த ஆய்வு காண்கிறது. ஒரு MRA இல் கைத்சாத்திடும் இரண்டு நாடுகளும் தமது சொந்த தரங்களைப் பேணுமாகையால், அது ஒரு குறுகிய கால எல்லைக்குள் அமுல்படுத்தப்பட முடியும். ஏற்றுமதி நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட, ஆதிகாரபூர்வ மற்றும் ஏற்றுக்கெள்ளப்பட்ட இசைவு மதிப்பீட்டு நிறுவனத்தினால் (CAB) வழங்கப்படும் இசைவுச் சான்றிதழை ஏற்றுக்கொள்ள இணங்குவதே ஓவ்வொரு நாடும் நிறைவேற்றவேண்டிய ஒரே நிபந்தனையாகும். இச்சான்றிதழ் இறக்குமதி செய்யும் நாட்டின் தரநியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் அப்பொருள் பூர்த்தி செய்கின்றதென உறுதிப்படுத்தும். ஏற்றுமதிக் கட்டத்தில் இசைவு மதிப்பிடப்பட்டு உறுதிப்படுத்தப்படுவதால், இறக்குமதிக் கட்டத்தில் இசைவை நிரூபிக்கும் தொல்லைக்கு உள்ளாக வேண்டியதில்லை.

இந்த ஒப்பந்தத்ததின் ஒரு மேலதிக நன்மை என்னவெனில், அது உத்தேச CEPA ஒப்பந்தத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, முதலில் இரு வர்த்தக பங்காளருக்கும் முன்னுரிமைக்குரிய பொருட்களை உள்ளடக்கியும் பின்னர் பரஸ்பர அங்கீகரிப்பிற்கு வசதியேற்படுத்த திறனையும் நம்பகத் தன்மையையும் கட்டியெழுப்புவதற்கு தேவைப்படும் காலத்தின் அடிப்படையில் ஏனைய பொருட்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட முடியும் என்பதாகும். CEPA வைப் போலன்றி MRA அதிக தாமதமன்றி அமுலாக்கப்படக்கூடிய, ஒப்பீட்டளவில் சிக்கலற்ற நேரடியான ஓர் ஒப்பந்தமாகையால், அதனை புறம்பாக அமுலாக்குவது விரும்பத்தக்கதாகும். மேலும், இரண்டு நாடுகளுக்குமிடையே CEPA ஏற்படுத்தக்கூடிய வர்த்தகத்திலும் முதலீட்டிலுமான மேலும் தாராளமயமாக்கல் குறித்து பல இலங்கை ஏற்றுமதியாளர்கள் சாதகமான கருத்தைக் கொண்டிராதவர்களாக உள்ளனர். NTB களை தீர்ப்பதற்கு கைச்சாத்திடப்பட்ட CAP கள் தொடர்பான ஒரு MRA ஆனது ISFTA இன் பயன்கள் தொடர்பான நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதற்கான மேலும் சாதகமானதொரு சூழலை உருவாக்க உதவவும் முடியும். எனவே, MRA இனை CEPA விலிருந்து பிரித்தெடுப்பது அமுலாக்கத்தை துரிதப்படுத்த உதவுவதோடு, இரு நாடுகளிலும் உள்ள வர்த்தகர்களுக்கு பரஸ்பரம் பயன்மிக்கதாகவும் அமையும். இறுதியாக, CAP கள் தொடர்பான ஒரு MRA இன் உரிய தொழிற்பாட்டிற்கு வசதியேற்படுத்த ஒரு ஏற்றுமதி பரிசோதனைத் திட்டத்தை/அமைப்பை தாபிப்பதற்கு இப்பத்திரம் பரிந்துரை செய்கிறது.

# முறையியலும் மட்டுப்பாடுகளும்

## முறையியல்

இந்த ஆய்வில் பின்பற்றப்பட்ட முறையியலில் இரண்டாம் நிலை மூலங்களிலிருந்தான ஆய்வுகள், முக்கிய ஆட்களுடனான நேர்முகங்கள், மற்றும் கொள்கைப் பரப்பிலுள்ள முக்கிய பங்கீடுபாட்டாளர்களுடனான மூளைக்கிளர்தல் கூட்டத்தொடர்கள் ஆகியன அடங்கியிருந்தன. இரண்டாம் நிலை மூலங்களிலிருந்தான ஆய்வின் பிரதான குறிக்கோள் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே உள்ள NTB களைப் பற்றியதும் மேலும் குறிப்பாக இரு நாடுகளிலும் பிரயேகிக்கப்படும் CAP கள் பற்றியதுமான பொதுவானதொரு புரிதலைப் பெற்றுக்கொள்வதாகும். மீளாய்வு செய்யப்பட்ட ஆவணங்களுள், அறிக்கைகள், செய்தித்தாள் கட்டுரைகள் மற்றும் வர்த்தக நிகழ்வுகளில் ஆற்றப்பட்ட உரைகள் ஆகியன அடங்கும். இவற்றிற்கு மேலதிகமாக,

ஏற்றுமதி இறக்குமதி தொடர்பான இலங்கை மற்றும் இந்தியச் சட்டங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களும் (உ.ம். SPS ஒப்பந்தம் மற்றும் TBT ஒப்பந்தம்) மீளாய்வு செய்யப்பட்டன. இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையேயான தற்போதைய வர்த்தக ஒப்பந்தங்களையும் இரு நாடுகளுக்குமிடையே பேணப்படும் வேறு வர்த்தக ஒப்பந்தங்களையும் CAP கள் மற்றும் MRA கள் சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களையும் ஆய்வாளர்கள் ஆய்வு செய்தனர்.

ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் இசைவு பிரச்சினைகள் தொடர்பான ஆவணங்களின் மீளாய்வுகளின் கண்டறிதல்களை ஒரு விடய ஆய்வாக சரிபார்த்து உறுதிப்படுத்துமுகமாக, இலங்கையிலிருந்து உணவு ஏற்றுமதிசெய்வோர் எதிர்நேக்கும் விஷேட பிரச்சினைகளில் இந்த ஆய்வு கூடிய கவனம் செலுத்துகிறது. இப்பிரச்சினை குறிப்பாக உணவுத் துறையை பாதகமாக பாதித்ததென்று ஆவண மீளாய்வு எடுத்துக்காட்டியதனால் இத்துறை தெரிவு செய்யப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகம் தொடர்பான தரவுகளைப் பகுப்பாய்வு செய்தததன்மூலம் இது மேலும் உறுதிசெய்யப்பட்டது. இரண்டாம் நிலை மூலங்களிலிருந்தான ஆய்வின் கண்டறிதல்களை உறுதிப்படுத்திக்கொள்ள ஏற்றுமதியாளர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் பரிசோதனை நிலையங்களிலுள்ள உத்தியோகத்தர்கள் ஆகிய முக்கிய ஆட்களுடனான நேர்முகங்கள் நடாத்தப்பட்டன.

ஆய்வின் இடைக்கால கண்டறிதல்கள் சட்ட, பொருளியல் மற்றும் அரசியல் துறைகளில் பின்னணியைக்கொண்ட வல்லுநர்களுக்கு மூளைக்கிளர்தல் கூட்டத்தொடரொன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. தற்போதைய ஆய்வில் இனங்காணப்பட்ட இடைவெளிகளைத் தீர்ப்பதற்கும் உத்தேச தீர்வுகளின் சாத்தியக்கூற்றைப் பற்றி கலந்துரையாடுவதற்கும் இக்கூட்டத்தெடர் பயன்படுத்தப்பட்டது. அதன்பின்னர், இவ்வாய்வு மேலும் செவ்வையாக்கப்பட்டு இரண்டு மன்றங்களில் சமர்ப்பிக்கப்பட்டது (LFVPPEA மற்றும் NCE ஆகியவற்றால் ஏற்பாடு செய்யபட்டன).

## மட்டுப்பாடுகள்

### 1) ஆய்வின் கவனக்குவிப்பு

இந்த ஆய்வை மேற்கொள்வதற்குக் கிடைத்த மட்டுப்படுத்தப்பட்ட காலத்தையும் வளங்களையும் கொண்டு பார்க்கும்போது, இவ்வாய்வின் ஒரு தடங்கலாக அமைந்தது இந்தியாவிற்கான இலங்கை ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின்மீதான அதன் கவனக் குவிப்பாகும். ஏனைய பொருட்களைவிட உணவுப்பொருட்களுக்கான தரநிபந்தனைகள் அதிகமாகவிருப்பதால் இந்த ஆய்வு உணவு ஏற்றுமதியாளர்களை ஒரு விடய ஆய்வாகப் பயன்படுத்தியது. எனினும், பிரிவு 3.3.2 இல் விளக்கப்பட்டவாறு இதற்காக முன்வைக்கப்படும் தீர்வு நாட்டிற்கு அல்லது பொருட்களுக்கென விஷேடமானதல்ல. உத்தேச ஒப்பந்தம் இலங்கைக்கும் இவ்வாறான பிரச்சினைகள் தடையாக அமையும் வேறு எந்த வர்த்தக பங்காளருக்குமிடையிலான வர்த்தகத்திற்கும் வசதியேற்படுத்த பயன்படுத்தப்படமுடியும்.

### 2) நடத்தப்பட்ட நேர்முகங்களின் எண்ணிக்கை

ஏற்றுமதியாளர்கள், பரிசோதனை நிலையங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட நேர்முகங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகும். ஏற்றுமதியாளர்களுடன் தொடர்பாடல் கொள்வதில் இருந்த சிரமங்கள் காரணமாக கிடைக்கக்கூடியதாகவிருந்த காலத்தில் மட்டுப்படத்தப்பட்ட அளவிலான நேர்முகங்களையே ஆய்வாளர்களால் நடத்தமுடிந்தது. மேலும், இந்நேர்முகங்களின் நோக்கம் இரண்டாம் நிலை மூலங்களிலிருந்தான ஆய்வு கட்டத்தில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளை தெளிவு படுத்திக்கொள்வதும் அவை பற்றிய சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதுமேயன்றி, இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யும்போது இக் குறிப்பிட்ட NTB களுக்கள்ளான ஏற்றுமதியாளர்கள் பற்றிய விரிவானதொரு ஆய்வினை மேற்கொள்வதல்ல.

# அறிமுகம்

நுகர்வோர், சூழல், தாவரங்கள் மற்றும் விலங்கு வாழ்க்கை ஆகியவற்றை பாதுகாத்தல் போன்ற சட்டபூர்வ பொது கொள்கை இலக்குகளை அடையும் பொருட்டு அனைத்து நாடுகளும் உற்பத்தித் தரங்களைப் பேணுகின்றன. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் அவற்றை இறக்குமதி செய்யும் நாடுகளின் தரநியமங்களுக்கும் ஒழுங்குவதிகளுக்கும் அமைவாக இருப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பு ஏற்றுமதியாளர்களுக்கும் உண்டு. ஒரு நாடு அத்தகைய தரநியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் கொண்டிருப்பதற்கான உரிமை சர்வதேச ஒப்பந்தங்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் அதேவேளை [1], தேவையற்ற விதத்தில் சர்வதேச வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தாதிருக்கவும் நாடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன (உ-ம் வரி அல்லாத தடைகளாக செயற்படாதிருக்க) [2]. எனவே, இறக்குமதி செய்யும் நாட்டின் தரநியமங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்குமான இயைந்தொழுகல், வர்த்தகத்திற்கு ஒரு தடையாக இல்லாதிருப்பதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை அமுல்படுத்துவது முக்கியமாகும்.

உடல்நல, பாதுகாப்பு மற்றும் சூழல் இடர்கள் பற்றிய பாவனையாளர்களது அதிகரிக்கும் விழிப்புணர்வினால் ஆரோக்கியமான, பாதுகாப்பன மற்றும் சூழல்நேய உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இதன்விளைவாக, நாடுகளினால் விதிக்கப்படும் தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் கடுமையானவையாக மாறிவருகின்றன. எனவே, ஏற்றுமதிகள் தேவையான தரநியமங்களைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்த திறனை மேம்படுத்தவதன் மூலமும் இயைந்தொழுகலை உறுதிப்படுத்துவதற்கு ஆகும் செலவையும் காலத்தையும் குறைப்பதன் மூலமும் ஏற்றமதிகளை ஊக்குவிப்பது முக்கியமாகும்.

வேறு பல நாடுகளைப்போலவே இலங்கையும் இத்தேவையை அங்கீகரித்துள்ளது. தற்போதைய செயல்திட்டக் கொள்கை ஏற்றுமதியாளர் மத்தியில் இறக்குமதி செய்யும் நாட்டின் தரங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் இத்தரங்களை பூர்த்தி செய்வதற்கான உள்நாட்டுத் திறனை கட்டியெழுப்புவதிலுமே முக்கிய கவனம் செலுத்துகிறது. சந்தேகத்திற்கிடமின்றி இது முக்கியமானதாகவிருக்கும் அதேவேளை, ஏற்றுமதியாளர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பல்வேறு காரணங்களினால் - உதாரணமாக, உட்பிரவேச புள்ளியில் இயைந்தொழுகலை சோதனை செய்ய வேண்டுமென இறக்குமதி செய்யும் நாடு வற்புறுத்துவதாகவிருந்து, இறக்குமதி செய்யும் நாட்டின் ஆய்வு கூடம் சோதனைச் சான்றிதழை வழங்குவதற்கு நியாயமற்றவகையில் நீண்ட காலம் எடுக்குமாயின்- இறக்குமதி செய்யும் புள்ளியில் ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கும் முயற்சிகள் குறைந்த பயனையே கொண்டிருக்கும். இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாடுகள் பல்வேறு வகையான இரு தரப்பு/பிராந்திய ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ளன. எனினும். இலங்கை அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. இத்தகைய இரதரப்பு/பல்தரப்பு ஒப்பந்தங்கள் பயனுள்ளவையாக இருக்குமென்பதோடு, வேறு நாடுகளோடு குறிப்பாக பின்வரும் சந்தர்ப்பங்களில் வர்த்தகம் செய்வதற்கு ஆகும் செலவையும் காலத்தையம் குறைக்கும்:

1) ஒரு நாடு மற்ற நாட்டின் சந்தைகளுக்குள் பிரவேசிப்பதற்கான வரித்தடைகள் அற்ற வாய்ப்பை வழங்கும் வர்த்தகத்திற்கு வசதியேற்படுத்தும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை நாடுகள் செய்து கொண்டிருந்து, பங்காளர் நாட்டின் தரங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இயைந்தொழுகலை உறுதிப்படுத்த ஆகும் செலவினாலும் காலத்ததினாலும் இதன் பயன் மறுக்கப்படும்போது,

---

[1] உலக சுகாதார ஸ்தாபனத்தின் தூய்மை மற்றும் தாவரத் தூய்மை அளவீடுகள் ஒப்பந்தத்தின் (SPS Agreement) சரத்து 2.1

[2] தூய்மை மற்றும் தாவரத்தூய்மை அளவீடுகள் ஒப்பந்தத்தின் சரத்து 2.2 மற்றும் 2.3 என்பனவுடன் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வர்த்தகத்துக்கான தொழில்நுட்பத் தடைகள் ஒப்பந்தத்தின் சரத்து 5.1 மற்றும் 5.2

2) தனது நாட்டிற்கு வெளியே உள்ள CAB களால் வழங்கப்படும் இசைவு மதிப்பீட்டு அறிக்கைகளை இறக்குமதி செய்யும் நாடு தன்னிச்சையாக ஏற்றுக்கொள்ளாதபோது,

3) அவற்றிற்கான செலவு மற்றும் ஆகும் காலம் என்ற வகையில் CAP கள் நியாயமற்றவையாகவும் தேவையற்ற விதத்ததில் வர்த்தகத்தை மட்டுப்படுத்துபவையாகவும் இருக்கும்போது.

இந்த ஆய்வுப் பத்திரத்தின் முக்கிய கவனம் இந்தியாவுடன் CAP கள் தொடர்பான ஒரு பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தத்தை (MRA) செய்துகொள்வதாகும். இந்த ஒப்பந்தத்தின் குறிக்கோள், நடைமுறையில் ஒரு NTBயாக இருக்கும் இறக்குமதி செய்யும் நாட்டின் தரநியமங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இயைந்தொழுகுவதற்கு ஆகும் செலவையும் காலத்தையும் குறைப்பதாகும். ஒரு விடய ஆய்வாக, இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான உணவு வர்த்தகத்திற்கு வசதியேற்படுத்துவதில் இத்தகைய ஒப்பந்தமொன்றின் பயன்களை இப்பத்திரம் எடுத்துக்காட்டுகிறது.

1988 இல் இந்தியாவும் இலங்கையும் இரு நாடுகளுக்குமிடையே நிலவிய வர்த்தகத் தடைகைள அகற்றுவதன் மூலம் வர்த்தக உறவுகளை வலுப்படுத்துமுகமாக இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை (ISFTA) செய்துகொண்டன. இந்த ISFTA 2000 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தது. ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் இவ்வர்த்தகத் தடைகளை நீக்க இவ்வொப்பந்தம் எதிர்பார்த்தபோதும், NTBகளைத் தீர்கப்பதற்கான எவ்வித தெளிவான ஏற்பாடுகளும் இருக்கவில்லை. வரித் தடைகளைத் தவிர, வர்த்தகதிற்குத் தடையாக இருக்கும் ஏனைய எல்லாத் தடைகளும் NTBகள் என்று குறிப்பிடப்படுகின்றன. இத்தடைகளுள் விதிகள், ஒழுங்குவிதிகள், தரங்கள், இறக்குமதி நடைமுறைகள், ஆவணங்கள் முதலியன அடங்குகின்றன. வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் பயன்களை அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கும் பல NTBகளை இலங்கை ஏற்றுமதியாளர்கள் இனங்கண்டுள்ளனர். இவ்வாறு இனங்காணப்பட்ட ஒரு NTB காலவிரயமிக்கதும் செலவுமிக்கதுமான CAP களாகும்.

NTBகள் எவ்வாறு இந்தியவிற்கும் இலங்கைக்குமிடையிலான உணவு வர்த்தகத்திற்கு எவ்வாறு தடையாக அமையும் என்பதை இவ்வறிக்கை இலங்கை ஏற்றுமதியாளர்களின் கண்ணோட்டத்திலிருந்து விளக்குகிறது. எனினும், உத்தேச பரிந்துரைகள் குறிப்பாக நாட்டிற்கு அல்லது பொருட்களுக்கென விஷேடமானவையல்ல. அவை இலங்கையில் இது போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கும் இந்திய ஏற்றுமதியாளர்களுக்கும் பொருந்தும் என்பதோடு, இலங்கைக்கும் வேறு எந்தவொரு நாட்டிற்குமிடையில் இதுபோன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கும் வேறு பொருட்களிலுமான வர்த்தகத்ததிற்கும் வசதியேற்படுத்த உதவும். சீனா போன்ற வேறு வர்த்தகப் பங்காளர்களுடன் இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளவிருப்பதால், இந்த ஆய்வின் கண்டறிதல்களும் பரிந்துரைகளும் வர்த்தகர்கள் உண்மையாகவே இவ்வொப்ந்தங்களிலிருந்து பயன்பெறலாம் என்பதையும் தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் வர்த்தகத்திற்குத் ஒரு தடையாக அமையாது என்பதை உறுதிப்படுத்துவதிலும் பயன்மிக்கவையாக இருக்கும்.

இந்த அறிக்கை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் பிரிவு 1 இலங்கைக்கும் இந்தியவிற்குமிடையிலான வாத்தகத்தை பகுப்பாய்வு செய்வதோடு, இவ்விரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்ததின்மீது NTBகள் ஏற்படுத்தும் தாக்கத்தையும் ஆராய்கிறது. தரங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இயைந்தொழுகுதல் NTBகளாக மாறி வர்த்தகத்தை பாதிக்கும் விதத்தை இப்பிரிவு ஆராய்கிகிறது. மேலும், பிரிவு I இரு நாடுகளுக்குமிடையில் தற்போதுள்ள ஒப்பந்தங்களையும் ஆராய்வதோடு, இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTBகளை எந்தளவிற்கு இவ்வொப்பந்தங்கள் தீர்க்கின்றன என்பதையும் ஆராய்கின்றது. இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTBகளை தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படக்கூடிய நான்கு நடவடிக்கைளை பிரிவு II முன்வைப்பதோடு, இந்நடவடிக்கை ஒவ்வொன்றினதும் சாத்தியக்கூற்றையும் ஆராய்கின்றது. இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTBகளின் விளைவாக வர்த்தகத்திற்கு ஏற்படும் தடங்கல்களைத் தீர்ப்பதற்கு மிகவும் சாத்தியமான தீர்வாக CAP கள் தொடர்பான MRA ஒன்றைப் பின்பற்றுவதில் பிரிவு III முக்கிய கவனம் செலுத்துகிறது. இப்பிரிவு இரு

நாடுகளுக்குமான முன்னோக்கிய பாதையை எடுத்துக்காட்டுவதோடு, இந்த விடயத்தில் CAP கள் தொடர்பான MRA ஒன்றிற்கு வசதியேற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விஷேட முயற்சிகள் பற்றியும் ஆராய்கிறது.

# பிரிவு I - இந்தியவிற்கும் இலங்கைக்குமிடையிலான உணவு வர்த்தகத்தின்மீதான NTB களின் தாக்கம்


இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான உணவு வர்த்தகத்தின்மீதான இயைந்தொழுதல் தொடர்புபட்ட தாக்கங்கள்மீது பிரிவு 1 கவனம் செலுத்துகிறது. இந்தியாவிற்கும் இலங்கைக்கமிடையிலான வர்த்தகத்திற்கு CAP கள் எவ்வாறு NTBகளாக உள்ளன என்பதை எடுத்துக்காட்டுவதற்கு இவ்விரு நாடுகளுக்குமிடையிலான பதனிடப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதியை இப்பிரிவு ஒரு விடயமாகப் பயன்படுத்துகிறது. தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் எவ்வாறு நியாயமற்ற விதத்தில் வர்த்தகத்தை மட்டுப்படுத்தலாம் என்பது பற்றிய ஒரு பொதுவான கண்ணோட்டம் ஆராயப்படுவதோடு, அதைத் தொடர்ந்து இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு பதனிடப்பட்ட உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வோர் எதிர்நோக்கும் தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான விஷேட பிரச்சினைகளின் விரிவானதொரு பகுப்பாய்வு இடம்பெறுகிறது. இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகத்திற்கான தரநியமங்கள் தொடர்புபட்ட தடைகள்மீது கவனம் செலுத்தும் தற்போதைய ஒப்பந்தங்கள் எவ்வாறு இலங்கை உணவு ஏற்றுமதியாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தவறுகின்றன என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இப்பிரிவில் உள்ளடக்கப்படும் முக்கிய துறைகளாவன:

- இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்: வர்த்தகத்தின்மீதான தாக்கம்
- தரநியமங்கள் தேவையா, அவை எவ்வாறு வர்த்தகத்தைத் தடுக்கின்றன?
- விடய ஆய்வு: இலங்கையிலிருந்து இந்தியவிற்கான உணவு ஏற்றுமதியின்மீது CAP களின் தாக்கம்
  - இந்தியாவுடனான உணவு ஏற்றுமதி வர்த்தகம்: ஒரு மீளாய்வு
  - CAP கள்: உணவு ஏற்றுமதிகளுக்கான ஒரு NTB
- இயைந்தொழுகலுக்கு வசதியேற்படுத்துவதற்கு இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் தற்போதுள்ள ஒப்பந்தங்கள்

## 1.1. இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்: வர்த்தகத்தின்மீதான தாக்கம்

இந்தியாவும் இலங்கையும் 1998 இல் இருதரப்பு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA) ஒன்றை செய்துகொண்டது. அது 2000 ஆம் ஆண்டில் அமுலுக்கு வந்தது. உரு 1 இல் காட்டியிருப்பதுபோல இலங்கையிலிருந்து இந்தியாவிற்கான ஏற்றுமதி இவ்வொதப்பந்தம் செய்துகொண்ட முதல் ஐந்து ஆண்டுகளில் துரிதமாக அதிகரித்தது. எனினும், 2005 ஆம் ஆண்டிலிருந்து ஏற்றுமதியின் வளர்ச்சி வேகம் கணிசமானளவு குறைவடைந்தது.

உரு 1: இலங்கையிலிருந்து இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் (2000 – 2014)




மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள், பல்வேறு ஆண்டுகள்

இரண்டாம் நிலை மூலங்களில் அடிப்டையிலான ஆய்வும் ஏற்றுமதியாளர் சங்கங்களுடன் நடத்தப்பட்ட ஆரம்ப கலந்துரையாடல்களும் NTBகள் தொடர்ந்து இருக்கின்றன என்பதையும் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யும் போது அவை கணிசமானதொரு தடங்கலாக உள்ளன என்பதையும் வெளிப்படுத்தின.

இரண்டாம் நிலை மூலங்களில் அடிப்டையிலான ஆய்வின மூலமும் இந்தியாவிற்கான ஏற்றுமதியாளர்களோடு நடத்தப்பட்ட முக்கிய நபர்கள் நேர்முகங்கள் மூலமும் இனங்காணப்பட்ட NTBகளுள் லேபலிடும் நிபந்தனைகள் தொடர்பான தெளிவற்ற தன்மை, மூலங்கள் பற்றிய நிபந்தனைகளின் கட்டுப்படுத்தும் விதிகள், வரி வீத கோட்டாக்கள், பொருத்தமற்ற மற்றும் தொல்லைமிக்க இறக்குமதி நடைமுறைகள், இறக்குமதி அனுமதிப்பத்திர நிபந்தனைகள் மற்றும் இந்திய தரநியமங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்குமான இயைந்தொழுகலை மதிப்பிடுவதற்குப் பின்பற்றப்படும் செலவுமிக்கதும் காலவிரயமானதுமான CAP கள் ஆகியனவும் இன்னும் பிறவும் அடங்குகின்றன.

## 1.2. தரநியமங்கள் தேவையா, அவை வர்த்தகத்தைத் தடுக்கின்றனவா?

முக்கிய பொதுக் கொள்கை இலக்குகளைப் பின்பற்றும் முழுமையற்ற ஒரு ஒழுங்குபடுத்தல் மார்க்கத்தை தரநியமங்கள் பிரதிபலிக்கின்றன. உதாரணமாக, தமது நாட்டிற்குள் உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு பொருளும் சூழல் மற்றும் நுகர்வோரின் பாதுகாப்பு மற்றும் உடல் நலம் ஆகியவற்றின்மீது பாதகமான தாக்கமெதனையும் கொண்டிருக்காதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு நாடும் நடவடிக்கை மேற்கொள்கிறது.

தரநியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் கொண்டிருப்பதற்கான ஒரு நாட்டின் உரிமை சர்வதேச வர்த்தகம் தொடர்பான பல்தரப்பு விதிகளில் அங்கீகரிக்கரிக்கப்பட்டுள்ளது. தூய்மை மற்றும் தாவரத்தூய்மை நடவடிக்கைகளின் பிரயோகம் தொடர்பான WTO ஒப்பந்தம் (SPS ஒப்பந்தம்) மானுட, மிருக அல்லது தாவர உயிரை அல்லது ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்குத் தேவையான தூய்மை மற்றும் தாவரத்தூய்மை நடவடிக்கைகளைப் பிரயோகிப்பதற்கான அரசாங்கங்களின் உரிமையை அங்கீகரிக்கிறது [3]. வர்த்தகத்திற்கான தொழில்நுட்ப தடைகள் தொடர்பான WTO ஒப்பந்தத்தோடு (TBT ஒப்பந்தம்)இணைந்து அது தரநியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் விதிப்பதற்கான நாட்டின் உரிமையைப் பாதுகாப்பதற்கும் அதேவேளை, அத்தகைய தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் இசைவு மதிப்பீட்டு நடைமுறைகளும்

[3] 1995ம் ஆண்டின் தூய்மை மற்றும் தாவரத் தூய்மை அளவீடுகள் ஒப்பந்தத்தின் சரத்து 2.1

பாரபட்சமற்றவையாகவும் வர்த்தகத்ததிற்கு தேவையற்ற தடைகளை ஏற்படுத்தாதவையாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் போராடுகிறது.[4]

சர்வதேச விதிகள் இருந்தும், நாடுகளினால் விதிக்கப்படும் தரங்களும் ஒழுங்குவிதிகளும் பாரபட்சமானவையாக இருப்பதோடு, வர்த்தகத்தின்மீதான முகமூடியிடப்பட்ட தடைகளாகவும் உள்ளன. பின்வரும் சந்தர்ப்பங்களில் தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் ஒரு NTB யாக மாறலாம்:

(அ) இறக்குமதிகளுக்கு மட்டும் இந்நடவடிக்கைகள் பிரயோகிக்கப்படும்போது

ஒரு குறிப்பிட்ட பொருள் தொடர்பான ஒரு குறிப்பிட்ட தரத்தின் குறிக்கோள் நுகர்வோரின் உடல் நலத்தைப் பாதுபாப்பதாயின், அத்தரம் உள்நாட்டில் உற்பத்திசெய்யப்படும் பொருளுக்கும் இறக்குமதி செய்யப்படும் பொருளுக்கும் பிரயோகிக்கப்படவேண்டும். SPS ஒப்பந்தத்தின் பிரிவு 2.3 "தமது நாட்டின் எல்லைகளுக்குள்ளேயும் ஏனைய உறுப்பு நாட்டு எல்லைக்குள்ளேயும் அதே போன்ற அல்லது அதனையொத்த நிலைமைகள் நிலவுமிடத்து, SPS நடவடிக்கைகள் ஒரு தலைப்படசமாக அல்லது நியாயமற்ற வகையில் உறுப்பு நாடுகளுக்கிடையில் பாரபட்சம் காட்டாதிருப்பதை" உறுப்பு நாடுகள் உறுதிப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடுகிறது. மேலும், TBT ஒப்பந்தத்தின் உறுப்புரை 5.1.1 ஏனைய உறுப்பு நாடுகளிலிந்து உற்பத்தியாகி வரும் பொருட்களுக்கான இயைந்தொழுகல் சோதனைக்குப் பிரயோகிக்கப்படும் CAP கள் உள்நாட்டு உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் "அதேபோன்ற பொருட்களுக்குப் பிரயோகிக்கப்படுவதைக் காட்டிலும் குறைந்த சாதகமானதாக" இருக்கவேண்டியதில்லை என்று குறிப்பிடுகிறது.

பிரயோகிக்கப்படும் நடைமுறைகள் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின்மீதானவையாக மட்டும் இருந்து, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின்மீது பிரயோகிக்கபடாமலிருப்பின், அத்தரநியமத்தின் நோக்கம் நுகர்வோரின் உடல்நலத்தைப் பாதுகாத்தல் என்ற போர்வையில் இறக்குமதிகளை அதைரியப்படுத்துவதேயாகும்.

(ஆ) தரநியமங்கள், சான்றுப்படுத்தல் மற்றும் சோதனை செய்தல் நிபந்தனைகள் தொடர்பான நாளதுவரைப்படுத்தப்பட்ட, நம்பகமான தகவல்கள் எளிதாகக் கிடைக்காத சந்தர்ப்பங்கள்

நுகர்வோரின் உடல் நலத்தைப் பாதுகாப்பதுதான் நோக்கமெனில், இயைந்தொழுகலை உறுதிப்படுத்துமுகமாக சம்பந்தப்பட்ட பொருளின் உள்நாட்டு உற்பத்தியாளருக்கும் இறக்குமதியாளருக்கும் தரநியமங்கள் தொடர்பான தகவல்களை தாராளமாகக் கிடைக்கச் செய்வது முக்கியமாகும்.

உரிய சர்வதேச தரநியமங்கள் அல்லாத ஏதேனும் தொழில்நுட்ப ஒழுங்குவிதி அமுலாக்கப்படும் போது அல்லது அவ்வொழுங்கு விதி சர்வதேச தரங்களுக்கு அமைவானதாக இல்லாதவிடத்து, அது ஏனைய உறுப்பு நாடுகளின் வர்த்தகத்ததின்மீது கணிசாமான தாக்கமொன்றைக் கொண்டிருக்குமாயின் அது பற்றி ஏனைய உறுப்பு நாடுகளுக்கு போதுமான அறிவித்தல் வழங்குமாறு TBT ஒப்பந்தத்தின் உறுப்புரை 2.9 உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கெள்கிறது.

நாளதுவரைப்படுத்தப்பட்டதும் நம்பகமானதுமான தகவல்கள் இல்லையெனில், அது இறக்குமதி செய்யும் நாட்டினால் அப்பொருள் நிராகரிக்கப்படும் சாத்தியத்தை அதிகரிக்கிறது. அதன் விளைவாக அது வர்த்தகததிற்கு ஒரு தடையாக இருக்கின்றது.

---

[4] தூய்மை மற்றும் தாவரத்தூய்மை அளவீடுகள் ஒப்பந்தத்தின் சரத்து 2.3 உடன் வர்த்தகத்துக்கான தொழில்நுட்பத் தடைகள் ஒப்பந்தத்தின் சரத்து 5.1 மற்றும் 5.2

(இ) இசைவு மதிப்பீட்டு நடைமுறை நியாயமற்ற முறையில் நீண்ட காலமெடுப்பதாகவும் செலவுமிக்கதாகுமிருக்கும் சந்தர்ப்பங்கள்

இயைந்தொழுகலை சோதிப்பதற்குப் பின்பற்றப்படும் நடைமுறை தொல்லைமிக்கதாகவும் தெளிவற்றதாகவும் இருப்பின், அது ஒரு NTB யாக மாறக்கூடும். உதாரணமாக சில நாடுகள் தமது நாட்டிற்கு வெளியே உள்ள ஆய்வுகூடங்களினால் வழங்கப்படும் இசைவு மற்றும் சோதனைச் சான்றுகளை ஏற்க மறுப்பதோடு, இறக்குமதிப் புள்ளியில் ஒவ்வொரு கப்பற்சரக்கினதும் இயைந்தொழுகலை சோதனை செய்வதென அடம்பிடிக்கின்றன.[5]

CAP கள் “பொறுப்பேற்கப்பட்டு, இயன்றவரை துரிதமாகவும், வேறு உறுப்பு நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் அதே போன்ற பொருட்களுக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குக் காட்டப்படும் சாதகத் தன்மையிலும் எவ்வித்திலும் குறைவில்லாத சாதகத்தன்மையோடும் பூர்த்தி செய்யப்படுவதை” உறுதி செய்யுமாறு TBT ஒப்பந்தத்தின் உறுப்புரை 5.2.1 உறுப்பு நாடுகளைக் கேட்டுக்கொள்கிறது. CAP களின் செயன்முறைக்குள்ளாகும் காலப்பகுதி வெளியிடப்பட வேண்டும் அல்லது விண்ணபபதாரரின் கோரிக்கையின்பேரில் அவருக்கு அறிவிக்கப்படவேண்டும் என்பதோடு, அதிலுள்ள குறைபாடுகள் அனைத்தும் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படவேண்டும் என்று உறுப்புரை 5.2.2 மேலும் குறிப்பிடுகிறது.

மேலும், பரிசோதனை அறிக்கையை சமா்ப்பிப்பதற்கு எடுக்கும் காலம் நீண்டதாகவும் அதற்கான செலவு தேவையற்ற வகையில் மிக அதிகமானதாகவும் இருப்பின் அது வா்த்தகத்துக்கான ஒரு தடையாக அமையக் கூடும். நீண்ட மற்றும் செலவு மிக்க CAP களும் தாமதங்களுக்கான காரணம் தொடா்பாக அதிகாரிகளால் வழங்கப்படும் தகவலின்பற்றாக்குறையும் இணைந்து, ஒரு NTB யாக மாறக்கூடும்.

## 1.3. விடய ஆய்வு: இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான உணவு ஏற்றுமதிகள்.

இந்த ஆய்வு, இலங்கையிலிருந்து இந்தியாவுக்கான உணவு ஏற்றுமதிகள் விடயத்தை இயைந்தொழுகல் தொடா்புபட்ட NTB க்களின் தாக்கத்தை விளக்குவதற்கு பயன்படுத்துகிறது.

### 1.3.1. இந்தியாவுடன் உணவு ஏற்றுமதிகளிலான வா்த்தகம்: ஒரு மீளாய்வு [6]

இந்தியா புவியியல் ரீதியாக இலங்கைக்கு மிகவும் அருகில் அமைந்துள்ள ஒரு துரிதமாக வளா்ச்சியுறும் பெரிய சந்தையாகும். இவ்விரு நாடுகளுக்குமிடையிலான FTA இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரியற்ற வாய்ப்பை வழங்குகிறது.

இலங்கை ஏற்றுமதியாளா்களுக்கு வழங்கப்படும் வரியற்ற ஏற்றுமதி வாய்ப்பு இந்தியாவுக்கான ஏனைய ஏற்றுமதியாளா்களை விட இலங்கை ஏற்றுமதியாளா்களுக்கு ஒரு அனுகூலத்தை குறிப்பாக, விவசாய

---

[5] வர்த்தகத்துக்கான தொழில்நுட்பத் தடைகள் ஒப்பந்தம் 1995

[6] இலங்கை, இந்தியாவிலிருந்தான உணவுப் பொருள் இறக்குமதிகளிற்கான வரிவிலக்கலின் நண்மைகளை நீடிக்கவில்லை, அனேகமான இந்தியாவிலிருந்தான உணவு மற்றும் விவசாயப் பொருட்கள் இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடண்படிக்கையின் படி இலங்கையின் “எதிர் மறை நிரல்” இலேயே பட்டியல்படுத்தப்படுகின்றன.


மற்றும் உணவுப் பொருட்களில் வழங்குகிறது. உத்தேச இறக்குமதிகளின் மீது இந்தியாவினால் விதிக்கப்படும் மிக அதிகமாக சலுகையளிக்கப்படும் நாட்டிற்கான (ஆகுநே) வரி மிக உயர்வானதாகக் காணப்படுகிறது. சராசரி வரி கிட்டத்தட்ட 30% மாகும். விஷேட பொருட்களின் மீதான வரி 100%–150% வரை உயர்வானதாக இருக்கவும் முடியும். இந்த FTA இந்திய சந்தைகளை இலக்கு வைக்கும் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு வாய்ப்பினை உருவாக்கி, இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பெரும்பாலான புதிய மற்றும் பதனிடப்பட்ட உணவுப் பொருட்களின் மீதான வரித் தடைகளின் நீக்கத்திற்கு காரணமாக அமைந்தது.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, உணவுப் பொருட்களும் விவசாயப் பொருட்களும் கட்டங் கட்டமான வரி நிரலில் (உ-ம். ஒரு நீண்ட காலப்பகுதியில் வரிகள் குறைக்கப்படும் பொருட்கள்) அல்லது, எதிர்மறை வரி நிரலில் (உ-ம். வரிகள் குறைக்கப்படாத உணர்வுபூர்வ பொருட்கள்) இருக்கும் பல புதிய FTA களில் இந்தியா கைச்சாத்திட்டுள்ளது. எனவே, இந்தியாவுக்கான ஏனைய நாடுகளிலிருந்தான இறக்குமதிகளோடு ஒப்பிடும்போது, இலங்கைக்கு ஒரு அனுகூலம் உண்டு.

இந்த அனுகூலங்களிருந்தும், இந்தியாவுக்கான ஒட்டு மொத்த ஏற்றுமதி கடந்த தசாப்தத்தில் உரு 2இல் காட்டப்பட்டவாறு மிகவும் மோசமாக செயலாற்றியுள்ளன. தற்போதைய FTA யில் காணப்படும் ஒரு முக்கிய பலவீனம் NTB க்களை தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாமையாகும். இத் தடைகள் இருப்பது இந்த FTA ன் கீழ் வரிச் சலுகையிலிருந்து முழுமையாகப் பயன் பெறுவதற்கான இலங்கை ஏற்றுமதியாளர்களின் இயலுமையைப் பாதிக்கின்றது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பெரும்பாலான விவசாய மற்றும் உணவுப் பொருட்கள் ISFTA ன் கீழ் இந்தியாவின் கட்டங் கட்டமான வரி நீக்கல் நிரலில் உள்ளன. இதன் விளைவாக, இப் பொருட்கள் மீதான வரித் தடைகள் 2003ஆம் ஆண்டிலேயே முழுமையாக அகற்றப்பட்டன. இதன் தாக்கம் இந்தியாவிற்கான பதனிடப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதிகளிலான வளர்ச்சியினால் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது (உரு.2ஐப் பார்க்க). HS அத்தியாயம் 16 -21 இன்கீழ் வரும் அனைத்து உணவுப் பொருட்களுக்கும் வரிச் சலுகையை இலங்கை இப்போது கொண்டுள்ளது: இறைச்சி வகைகள், இனிப்புப் பண்டங்கள், கொக்கோ தயாரிப்புகள், தானிய தயாரிப்புகள், மரக்கறி மற்றும் பழத் தயாரிப்புகள் மற்றும் ஏனைய உண்ணத்தகுந்த தயாரிப்புகள். வரியற்ற சலுகை இருப்பதனால், இப் பொருட்களின் ஏற்றுமதியில் ஓர் ஆரம்பக் கட்ட எழுச்சி நிலவியது. எனினும், இந்த வளர்ச்சி 2011இல் US $ 28 மில்லியனிலிருந்து 2014இல் US $ 7 மில்லியனாக வீழ்ச்சியுற்றதால், அதனைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வது சவால் மிக்கதாக உள்ளது. பேட்டி காணப்பட்ட ஏற்றுமதியாளர்களில் ஒருவர், NTB க்கள் காரணமாக குறிப்பாக, இயைந்தொழுகலை பரிசோதிப்பது என்ற காரணத்தின் அடிப்படையில் துறைமுகங்களிலிருந்து பொருட்களை விடுவிப்பதற்கு ஆகும் காலம் மற்றும் செலவு காரணமாக இந்தியாவிற்கு பழச்சாறு மற்றும் தானிய பார்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதை கைவிட்டுவிட்டார்.

உரு 2: இலங்கையிலிருந்து இந்தியவிற்கும் உலகிற்குமான பதனிடப்பட் உணவுப் பொருள் ஏற்றுமதிகள்




மூலம்: வர்த்தக தரவுகள் (HS அத்தியாயம் 16-21) – சர்வதேச வர்த்தக நிலையம்

## 1.3.2. CAP கள்: உணவு ஏற்றுமதிக்கான ஒரு NTB [7]

இந்தியவிற்கான உணவுப் பொருள் ஏற்றுமதியாளர்களால் இந்த ஆய்வில் இனங்காணப்பட்ட ஒரு NTB நுழையும் புள்ளியில் இந்திய தர நியமங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இயைந்தொழுகலை மதிப்பிடுவதற்கு ஆகும் செலவும் காலமுமாகும். இலங்கையிலிருந்து இந்தியாவிற்கான உணவுப் பொருள் ஏற்றுமதி தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் எவ்வாறு நியாயமற்ற வகையில் வர்த்தகத்தை கட்டுப்படுத்தக்கூடும் என்பதற்கான சிறந்த உதாரணமாகும். இலங்கையிலிருந்து பதனிடப்பட்ட உணவுப்பொருட்களை ஏற்றுமதி செய்பவர்களின் அனுபவம் வரித் தடைகளை நீக்குவதில் விஷேடமாகச் செலுத்தப்படும் கவனம் எவ்வாறு போதாமலுள்ளது என்பதையும் வர்த்தகத்திற்கு வசதியேற்படுத்துவதற்கு NTBகளை அகற்றுவதும் அதைப்போலவே அல்லது அதற்கு மேலும் முக்கியமானது என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது.

பெரும்பாலான உணவுப்பொருட்களுக்கு இந்திய அதிகாரிகள் அவர்களது நாட்டிற்கு வெளியே அமைந்துள்ள CABகளால் வழங்கப்படும் இசைவுச் சான்றுகளை ஏற்றுக்கொள்வதில்லை. இதன் விளைவாக, ஏற்றுமதிக்கு முன்னதாகவே ஏற்றுதிப் பொருட்கள் இந்திய ஒழுங்குவிதிகளுக்கும் தரநியமங்களுக்கும் இசைவானவை என இலங்கை ஏற்றுமதியாளர்கள் சான்றுபத்திரம் பெற்றிருப்பினும், அப்பொருட்கள் இந்திய துறைமுகத்திற்கு வந்தடைந்ததும் இந்திய அதிகாரிகளினால் மீண்டும் சோதனை செய்யப்படுகின்றன.

இறக்குமதி செய்யும் நாட்டின் தர நியமங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இசைவாக பொருட்கள் இருக்க வேண்டியதை உறுதிப்படுத்துவது முக்கியமானதாக இருக்கும் அதேவேளை, CAP கள் நிறைவேற்றப்படும் முறை நியாயமானதாக இருப்பதோடு, வர்த்தகத்திற்கு தேவையற்ற தடையாக மாறிவிடாதிருப்பதை உறுதி செய்வதும் அதேபோன்று முக்கியமானதாகும். இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் புள்ளிகளில் CAPகள் பின்வரும் காரணங்களினால் வர்த்தகத்திற்கு ஒரு தடையாக அமைகின்றன:

(அ) இயைந்தொழுகல் செலவு

சோதனைக்கான செலவு சோதனை செய்யப்படும் ஒவ்வொரு மாதிரிக்கும் $ 4.50 - $ 70 வரை உள்ளதென ஆவண மீளாய்வு எடுத்துக் காட்டுகிறது. [8] சில சந்தர்ப்பங்களில் அதிகாரிகள் வெவ்வேறு அளவான போத்தல்கள்/பொதிகளில் அடைக்கப்பட்ட ஒரே பொருளுக்கு வெவ்வேறு மாதிரிகளை எடுத்து வெவ்வேறு சோதனைகள் செய்ய வேண்டுமெனவும் வற்புறுத்துகின்றனர். [9] இது, ஏற்றுமதியாளருக்கு சோதனைச் செலவை மேலும் அதிகரிக்கின்றது. கப்பல் சரக்குகள் சிறியதாகவிருக்கும் சிறிய மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளருக்கு இச் செலவு கணிசமானதொரு பிரச்சினையாக மாறலாம். அத்துடன், இயைந்தொழுகல் சோதனைச் செலவு கப்பற்சரக்கு பெறுமதியின் குறிப்பிட்ட வீதமென்ற வகையில் மிக உயர்வாக இருக்கும். மிக அதிகளவில் எடுக்கப்படும் மாதிரிகள் அப் பொருளின் பெறுமதி உயர்வானதாக இருந்தால் ஒரு மேலதிக செலவாக மாறலாம் (உ-ம். மிக உயர்ந்த பெறுமதி கொண்ட தேயிலை).

மேலும், பேட்டி காணப்பட்ட இந்தியாவுக்கான ஏற்றுமதியாளர்கள் அனைவரது விடயத்திலும் (புதிய மற்றும் பதனிடப்பட்ட உணவுகள்) அதிகாரிகளினால் சோதனை அறிக்கைகள் வழங்கப்படுவதில் ஏற்படும் தாமதங்களினால் கப்பல் சரக்குகள் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. மேலும், இதன் விளைவாக

---

[7] இலங்கை, இந்தியாவிலிருந்தான உணவுப் பொருள் இறக்குமதிகளிற்கான வரிவிலக்கலின் நண்மைகளை நீடிக்கவில்லை, அனேகமான இந்தியாவிலிருந்தான உணவு மற்றும் விவசாயப் பொருட்கள் இந்திய-இலங்கை சுதந்திர வர்த்தக உடண்படிக்கையின் படி இலங்கையின் “எதிர் மறை நிரல்” இலேயே பட்டியல்படுத்தப்படுகின்றன.

[8] Deb Pal, B. ‘இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வரி அல்லாத தடைகள்’, கமூக மற்றும் பொருளியல் மாற்றத்திற்கான நிறுவனம். 2015

[9] Ibid

ஏற்றுமதியாளருக்கு பொருட்களை அப்புறப்படுத்தாததற்கான தண்டப்பணமும் களஞ்சிய செலவுகளும் ஏற்படுகின்றது.

இம் மேலதிக செலவுகள் பொருட்களின் விலைகளில், குறிப்பாக, ஏற்றுமதிகளின் அளவு சிறியதாகவிருக்கும்போது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். அதிகரித்த செலவானது பொருட்களின் அதிகரித்த விலைக்கு காரணமாக அமைகிறது. இது, ஏற்றுமதி செய்யப்படும் ஒரு பொருளின் விலைப் போட்டித் தன்மை மீது எதிர்மறையான தாக்கமொன்றை ஏற்படுத்துகின்றது. இது, பொருளின் விற்பனையைப் பாதிக்கின்றது. ஏனெனில், பேட்டி காணப்பட்ட ஏற்றுமதியாளர்கள் ஊர்ஜிதப்படுத்தியவாறு இந்தியா ஒரு மிகவும் விலைப் போட்டித்தன்மைமிக்க சந்தையாகும். எடுத்துக்காட்டாக, மாமர பசையைப் பொறுத்தவரை நூல் பகுப்பாய்வு நடத்தப்படவேண்டியுள்ளது. இதற்கு கப்பல் சரக்கொன்றிற்கு கிட்டத்தட்ட 5,000- 6,000 இந்திய ரூபாய்கள் செலவாகும்.[10] இச் செலவுகள், பொருளின் கிரயத்தோடு சேர்க்கப்படுகிறது. இதன் விளைவு அப் பொருள் இந்திய சந்தைக்குள் பிரவேசிக்கின்றபோது விலை கூடியதாக மாறுகிறது. இதுவே பேட்டி காணப்பட்ட இந்தியாவுக்கான புதிய மற்றும் பதனிடப்பட்ட பொருட்களின் இலங்கை ஏற்றுமதியாளர்கள் கூறிய விடயமாகும்.

(ஆ) பொருட்களை விடுவிப்பதில் ஏற்படும் தாமதம்

சோதனை அறிக்கைகளை வழங்குவதற்கு எடுக்கும் காலம் துறைமுகத்துக்குத் துறைமுகம் வேறுபடுகிறது. மீளாய்வு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஆய்வுகூட அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கிட்டத்தட்ட 20 -30 நாட்கள் எடுக்கக்கூடுமென்றும் பொருட்களை சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்கு ஒட்டுமொத்தமாக 30 - 40 நாட்கள் பிடிக்குமென்றும் எடுத்துக் காட்டுகின்றது[11]. நடத்தப்பட்ட நேர்முகங்களிலிருந்து ஸ்ரோபரீஸ் போன்ற புதிய பழங்கள் 5 நாட்கள் வரை தேங்கிக் கிடக்கின்றன என்றும் கோடியல், சோஸ் மற்றும் ஜேம் போன்ற பதனிடப்பட்ட உணவுப்பொருட்கள் 14 நாட்கள் முதல் மூன்று மாதங்கள் வரை தேங்கிக் கிடக்கின்றன என்றும் தெரிய வருகின்றது. குறுகிய கால அடைக்கப்பட்ட வாழ்வுக் காலத்தைக்கொண்ட பொருட்களைப் பொறுத்தவரை இது சில சமயங்களில் துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படும் நேரத்தில் பாவனைக்குப் பொருத்தமற்றதாய் ஆகுவதற்கு இட்டுச் செல்வதோடு, வேறு சந்தர்ப்பங்களில் குறுகிய காலத்தில் அவற்றை விற்பனை செய்வதற்கு அழுத்தம் கொடுக்கின்றது. உணவுப் பொருட்கள் பொதுவாக மட்டுப்படுத்தப்பட்ட காலத்தினுள் நுகரப்பட வேண்டியவை ஆதலால் இக்குறிப்பிட்ட பிரச்சினை புதிய பழ ஏற்றுமதியாளர்களுக்கு மிகவும் பாரியதாகவிருப்பதாக தெரிய வருகிறது.

மேலும், சில பொருட்களைப் பொறுத்தவரை விடுவிக்கப்படும் நேரத்தில் பொருளின் அடைக்கப்பட்ட வாழ்வுக் காலம் ஆறு மாதத்திற்குக் குறைவானதாக இருக்குமாயின் அப் பொருட்கள் இந்திய வெளிநாட்டு வர்த்தக பணிப்பக ஜெனரலினால் (DGFT) அனுமதிக்கப்பட மாட்டா.[12] சோதனை அறிக்கையைப் பெற்றுக்கொள்வதிலான தாமதங்கள் அல்லது இசைவு தொடர்பான பிரச்சினைகள் காரணமாக எவ்வளவு காலத்திற்கு பொருட்கள் துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றனவோ அவ்வளவுவிற்கு ஏற்றுமதியாளர்கள் இந்தியச் சந்தைகளில் அப் பொருட்களைவ விற்க முடியாமல் போகும் இடரை எதிர்கொள்கின்றனர்.

(இ) நிச்சயமற்றதன்மை

சோதனை அறிக்கைகளைச் சமர்ப்பித்து பொருட்களை விடுவிப்பதற்கு எடுக்கும் காலம் கப்பல் சரக்கிற்கு கப்பல் சரக்கு மற்றும் துறைமுகத்துக்குத் துறைமுகம் வேறுபடும். பேட்டிகாணப்பட்ட ஏற்றுமதியாளர்

[10] Ibid
[11] Ibid
[12] உணவு இறக்குமதி அனுமதி ஒழுங்குமுறைகள் கையேடு, இந்தியாவின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு அதிகாரசபை. 2013

ஒருவாறல் சுட்டிக்காட்டப்பட்டவாறு, சந்தை ஒருங்கிணைப்புச் செய்வதிலும் கொள்வனவாளர்களுடனான விநியோகத் திட்டங்களிலும் சிரமங்களை ஏற்படுத்துகிறது. விடுவிக்கப்படும் திகதி தெரியாததனால், "பொறுத்ததிருந்து பார்க்கும்" ஒரு அணுகுமுறையைப் பின்பற்றும் இந்திய இறக்குமதியாளர்களுக்கும் ஏற்றுமதியாளர்களுக்கும் தேவையான சில்லறை றாக்கை இடவசதி, களஞ்சியசாலை முதலியவற்றைப் பெற்றுக்கொள்வது மிகவும் சிக்கலாக்கப்படுகிறது.

செலவுகளும் தாமதங்களும் தெரிந்தவையாகவும் தொடர்ந்தேர்ச்சியானவையாகவும் இருப்பின், ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி செய்யும்போது இவற்றைக் கவனத்திலெடுத்து அதற்கேற்ப திட்டமிடலாம். எனினும், தாமதங்களும் செலவுகளும் மாறிக்கொண்டே இருப்பின் கொள்வனவாளர்களை தக்க வைத்துக்கொள்வதும் தொடர்ந்து ஏற்றுமதி செய்வதும் மிகவும் சவால் நிறைந்ததாகவே இருக்கும். இதுவே இலங்கை பழச்சாறு மற்றும் பழ பார்களின் இலங்கை ஏற்றுமதியாளர்களின் நிலையாகும். அவர்கள் ஏற்றுமதியாளரின் கப்பற் சரக்கு மூன்று மாதங்களுக்கு விடுவிக்கப்படாததாலும் அதன் விளைவாக பண்டிகைகள் மற்றும் விடுமுறைக் காலங்கள் போன்ற விற்பனை உச்ச நிலையிலிருக்கும் காலத்தில் பொருட்களை வழங்க முடியாதிருப்பதாலும் வாடிக்கையாளர்களை இழக்கின்றனர்.

## 1.4. இயைந்தொழுகலுக்கு வசதியேற்படுத்த இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே தற்போதிருக்கும் ஒப்பந்தங்கள்:

பிரிவு 1.3.2 இல் ஆராயப்பட்டவாறு, நாட்டிற்கு வெளியே அமைந்துள்ள அதிகாரபூர்வமானதும் அங்கீகரிக்கப்பட்டதுமான CAB களினால் வழங்கப்படும் தரநியமங்கள் இசைவுச் சான்றுப் பத்திரங்களை தன்னிச்சையாக ஏற்றுக்கொள்ளும் ஒரு முறைமையை இலங்கை கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இயைந்தொழுகலோடு இசைவாதலை எளிதாக்குவதற்கு இணங்கிக்கொள்ளப்பட்ட மேலும் பல நமவடிக்கைகளும் உண்டு. அவை கீழே மேலும் விபரமாக ஆராயப்படும்.

(அ) இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் இறக்குமதி பரிசோதனைத் திட்டத்திற்கான இந்திய ஏற்றுமதி பரிசோதனைச் சபையின் ஏற்றுமதி பரிசோதனை மற்றும் சான்றுப்படுத்தல் முறைமையின் அங்கீகரிப்புக்கான ஒப்பந்தம் (2002)

இந்திய EIC ற்கும் SLSI ற்கும் இடையிலான ஒப்பந்தம் EIC இனால் குறிப்பிட்ட சில பொருட்களின் ஏற்றுமதி பரிசோதனை மற்றும் இயைந்தொழுகல் சான்றுப்படுத்தலை SLSI அங்கீகரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறது.[13] இப் பொருட்கள் இந்திய அதிகாரபூர்வ ஆய்வுகூடங்களினால் பரிசோதிக்கப்பட்டு EIC இனால் இலங்கை தர நியமங்களோடு இசைவானதாக உள்ளதென சான்றுப்படுத்தப்பட்டால் அவை இலங்கைக்குள் வந்தவுடன் சோதனை செய்யப்பட வேண்டியதில்லை. (SLSI இப் பொருட்களின் மீது எழுமாறான பரிசோதனைகளை

---

[13] இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவகம் (SLSI) இலங்கையின் தேசிய தர நியமங்கள் நிறுவனமாகும். அது 1964ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க இலங்கைத் தரக் கட்டுப்பாட்டுப் பணியகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டு ஆரம்பத்தில் இலங்கை தரக் கட்டுப்பாடு பணியகம் எனும் பெயரில் இயங்கியது. 1984இல் 1964ஆம் ஆண்டுச் சட்டம் நீக்கப்பட்டு, 1984ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனச் சட்டத்தினால் பதிலீடு செய்யப்பட்டது. SLSI கைத் தொழில், வர்த்தக அமைச்சின் கீழ் இயங்குகிறது. மேலும், இலங்கை அதிகாரிகள் இந்திய தர நியமங்கள் பணியகம் (BSI) போன்ற அங்கீகரிக்கப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான தேசிய மற்றும் சர்வதேச CAB களினால் வழங்கப்படும் இயைந்தொழுகல் அறிக்கைகளை தன்னிச்சையாக ஏற்றுக்கொள்கின்றனர். அதிகாரிகள் இறக்குமதிகளின் மீது எழுமாறான சோதனைகள் செய்கின்றனர். எனினும், சான்றுப்படுத்தல் முறையானதாகவிருப்பின் அவர்கள் ஒவ்வொரு கப்பல் சரக்கையும் சோதனை செய்வதில்லை. மேலும், பிரிவு 1.4 இல் இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் (SLSI) பற்றி விபரமாக ஆராயப்படும்.

மேற்கொள்ளலாம். எனினும், இயைந்தொழுகலைத் தீர்மானிப்பதற்காக ஒவ்வொரு கப்பற் சரக்கையும் அது சோதனை செய்யாது)[14]

இவ்வொப்பந்தத்தில் உள்ளடக்கப்படும் பொருட்கள் 2013ஆம் ஆண்டின் இறக்குமதிகள் (தரக் கட்டுப்பாடு மற்றும் தரப்படுத்தல்) ஒழுங்குவிதிகளின் கீழ் குறித்துரைக்கப்பட்ட பொருட்களாகும். 50 பொருட்கள் இவ் ஒழுங்குவிதிகளின் கீழ் உள்ளடக்கப்படுகின்றன. 2014இல் உள்ளவாறு, இப் பொருட்களுள் 34 இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களாகும்[16].

இவ் ஒப்பந்தம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கான இறக்குமதிகளுக்கு வசதியேற்படுத்துகின்றபோதிலும், இந்திய சந்தைக்குள் பிரவேசிக்கும் இலங்கைப் பொருட்களுக்கு இந்த நன்மைகள் வழங்கப்படுவதில்லை. எனவே, இது “பரஸ்பரம்” ஆனதல்ல. பதிலாக அது ஓர் “ஒருதலைப்பட்சமான” ஒப்பந்தமாகும்.

(ஆ) இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்திற்கும் இந்திய தர நியமங்கள் பணியகத்துக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் (2006).

இந்த ஒப்பந்தம் SLSI (இலங்கையின் தேசிய தர நியமங்கள் அமைப்பு) மற்றும், BIS (இந்திய தேசிய தர நியமங்கள் அமைப்பு) ஆகியன ஒன்று மற்றொன்றை மாதிரிகளை சோதனை செய்தல் மற்றும் சான்றுப்படுத்துதலை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டதாக அங்கீகரிப்பதற்கு ஏற்பாடு செய்கிறது. மேலும், தரநியமங்கள் இசைவுபடுத்தப்பட்டிருப்பின், மற்ற நிறுவனத்தால் வழங்கப்பட்ட பரிசோதனை மற்றும் சோதனை அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு ஏற்பாடு செய்கிறது.

இந்த ஒப்பந்தம் 2006 ஆம் ஆண்டிலிருந்து அமுலிலிருந்தபோதும், இவ்வொப்பந்தத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதை நோக்கி எவ்வித நகர்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், சான்றுப்பத்திரங்களையும் அறிக்கைகளையும் ஏற்றுக்கொள்வது தர நியமங்களின் இசைவுபடுத்தல் எனும் நிபந்தனைக்கு உட்படுவதால், இலங்கை ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் தற்போதைய இயைந்தொழுகல் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இது உதவமாட்டாது. பிரிவு 2இல் ஆராயப்பட்டவாறு, தரநியமங்களை இசைவுபடுத்தல் என்பது, ஒரு சிக்கலானதும் கால விரயமானதுமான ஒரு நடைமுறையாகவே உள்ளது.

[14] மேலும், இலங்கை அதிகாரிகள் இந்திய தர நியமங்கள் பணியகம் (BIS) போன்ற அங்கீகரிக்கப்பட்டதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான தேசிய மற்றும் சர்வதேச CAB களினால் வழங்கப்படும் இயைந்தொழுகல் அறிக்கைகளை தன்னிச்சையாக ஏற்றுக்கொள்கின்றனர். அதிகாரிகள் இறக்குமதிகளின் மீது எழுமாறான சோதனைகள் செய்கின்றனர். எனினும், சான்றுப்படுத்தல் முறையானதாகவிருப்பின் அவர்கள் ஒவ்வொரு கப்பல் சரக்கையும் சோதனை செய்வதில்லை.

# பிரிவு II- இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTB க்களை தீர்ப்பதற்கான உத்தேச தீர்வுகள்.

இறக்குமதிப் புள்ளியில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் இசைவை இறக்குமதி செய்யும் நாடு மதிப்பிடுவதால் ஏற்படும் நியாயமற்ற தாமதங்கள் மற்றும் செலவுகள் முதலிய ஏற்றுமதியாளர்கள் எதிர்கொள்ளும் தடைகளை தீர்ப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை பகுதி II விளக்குகிறது. இத்தகைய தாமதங்கள்

- வர்த்தகத்தின் மீதானதொரு மறைமுகமான மட்டுப்படுத்தலாக அமையும் இறக்குமதிகளை அதைரியப்படுத்தும் எண்ணத்துடனான சிக்கலானதும் செலவுமிக்கதும் நீண்டதுமான ஒரு நடைமுறையைப் பின்பற்றுதல் அல்லது
- இறக்குமதி செய்யும் நாட்டினால் எதிர்கொள்ளப்படும் நியாயமான பிரச்சினைகள், அதாவது, துறைமுகத்துக்கு அருகில் அதிகாரபூர்வ CAB கள் இன்மை அல்லது CAB களில் வளங்கலின்மை முதலியன அறிக்கைகளை வழங்குவதிலான தாமதங்களுக்கு இட்டுச் செல்லுதல்.

இறக்குமதிப் புள்ளியில் ஏற்படும் இயைந்தொழுகல் தொடர்புபட்ட செலவுகளும் தாமதங்களும் உணவுப் பொருள் ஏற்றுமதியாளர்களால் மட்டும் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் அல்ல. அவை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகத்துக்கு மட்டும் உரியனவுமல்ல. இவை பல நாடுகளினாலும் பல்வேறு வகையான பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் பலரினாலும் எதிர்நோக்கப்படும் வர்த்தகத்திற்கான CAP கள் தொடர்புபட்ட பொதுவான பிரச்சினைகளாகும். எனவே, இத் தடையை வெற்றி கொள்வதற்கு மேற்கொள்ளப்படக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பான பரந்துபட்ட ஆவணத் தொகுதியொன்று உள்ளது[17]. இப் பகுதி பொதுவாக அமுலாக்கலில் அவற்றின் நடைமுறைச் சாத்தியம் மற்றும் குறிப்பாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகத்தில் அவற்றின் பொருத்தப்பாடு ஆகியவற்றினடிப்படையில் இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTB கள் பிரச்சினையைத் தீர்ப்பதை நோக்காகக் கொண்ட நடவடிக்கைகளை சுருக்கமாக ஆராய்கிறது:

- தர நியமங்களின் இசைவாக்கம்
- ஒத்தத்தன்மை ஒப்பந்தம்
- வெளிநாட்டு தயாரிப்பாளரை அங்கீகரித்தல்
- இசைவு மதிப்பீட்டு நடைமுறைகளின் (CAP) பரஸ்பர அங்கீகாரம்

இந்திய தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றிற்கு இயைந்தொழுகுதல் காரணமாக இலங்கை ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் செலவு மற்றும் தாமத NTB களை தீர்ப்பதற்கான மிகவும் சாத்தியமான தீர்வாக இசைவு மதிப்பீட்டு நடைமுறைகளிலான ஒரு பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தத்தை இனங்காண்பதோடு இப்பகுதி முற்றுப்பெறும்.

## 2.1. தரநியமங்களின் இசைவாக்கல்

நாடுகள் குழுவொன்றினால் பொதுவானதும் ஒத்த தன்மையானதுமான தர நியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் வகுப்பது இசைவாக்கல் எனக் கருதப்படும்.[15]

*குறிக்கோள்கள்:* இசைவாக்கலின் குறிக்கோள் ஒரு சேவைக்கு அல்லது பொருளுக்கு எல்லா நாடுகளும் ஒரேவித, கட்டாய தரநியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் கொண்டிருக்கவேண்டும் என்பதாகும் [16]. தரநியமங்களை இசைவுபடுத்துதல் என்பது, பல்வேறு ஏற்றுமதிச் சந்தைகளில் நிலவும் ஒன்றுக்கொன்று வேறுபடும் தரநியமங்களுக்கு இயைந்தொழுகவேண்டியிருப்பதினால் எழும் இரட்டை இயைந்தொழுகல் செலவுகளைக் குறைப்பதற்கான பயன்மிக்கதொரு வழியாகும். கொள்கையளவில், ஒரேவித தரநியமங்கள் கொடுக்கல் வாங்கல் செலவுகளை குறைத்தும் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தும் சர்வதேசச் சந்தையை கூடுதல் வினைத்திறன் மிக்கதாகவும் போட்டித்தன்மை மிக்கதாகும் மிளிரச் செய்யும்.[17]

*அமுலாக்கம்:* தர நியமங்களை இசைவாக்குதலானது, வர்த்தகப் பங்காளர்கள் ஒரு பொதுவான உரிய சர்வதேச தரநியமங்களை பின்பற்ற இணங்கிக்கொள்வதன் மூலம் அல்லது தமது சொந்த தரநியமங்களை நிர்ணயித்துக்கொள்வதன் மூலம் செய்யப்படலாம். "சர்வதேச இசைவாக்கல்" எனும் எண்ணக்கரு WTO மற்றும் SPA ஒப்பந்தங்களில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.[18]

வேறுபடும் தரநியமங்களை பின்பற்றுவதை நிரூபிப்பதற்கான விஞ்ஞானபூர்வமான நியாயங்கள் நிலவினாலொழிய, சர்வதேச தர நியமங்கள், வழிகாட்டுநெறிகள் அல்லது பரிந்துரைகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு SPS நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்த ஒப்பந்தம் அரசுகளைக் கேட்டுக்கொள்கிறது. [19] மேலும், நாட்டில் பின்பற்றப்படும் சட்டபூர்வ நோக்கங்களை பூர்த்தி செய்வதற்கு சர்வதேச தர நியமங்கள் பயனற்றவையாக அல்லது பொருத்தமற்றவையாக இருந்தாலொழிய, உரிய சர்வதேச தர நியமங்களுக்கு அமைவாக தொழில்நுட்ப ஒழுங்குவிதிகளை பிரயோகிக்குமாறு அரசுகளை TBT ஒப்பந்தம் வேண்டிக்கொள்கிறது.[20]

ஒழுங்குவிதிகளினதும் தரநியமங்களினதும் தொடர்ந்தேர்ச்சிக்கு இசைவாக்கல் இடமளிக்கிறது. இந்தப்பொறிமுறையின் வாயிலாக விதிகள் ஒன்றேதான் என்பதுவும் எனவே ஒரு பொருளை சந்தையிலிடும் வழங்குநர் நியாயாதிக்கங்கள் எப்படியிருப்பினும் அதனை பொருட்படுத்தாது அதே விதிகள் பொருந்தும் என்பதும் வெவ்வேறு பிராந்தியங்களிடையே இரட்டைப் பரிசோதனை மற்றும் சான்றுப்படுத்தல் இருக்காது என்பதும் தெளிவாகிறது[21]. ஐரோப்பிய ஒன்றியமும் ASEANஉம் அப்பிராந்தியங்களிலுள்ள நாடுகளிடையே

---

[15] நீதிநியாயாதிக்கங்களிடையே நிலவும் தரநியமங்களிலும் ஒழுங்குவிதிகளிலுமான வேறுபாடுகள் ஒவ்வொரு நாட்டிற்குமான சட்டபூர்வ கொள்கைசார் குறிக்கோள்களைப் பிரதிபலிக்கின்றன. எனினும், இவ் வேறுபாடுகள் ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு பிரச்சினையை ஏற்படுத்தக் கூடும். பேட்டி காணப்பட்ட ஏற்றுமதியாளர்களுள் பலர் தர நியமங்கள் எவ்வாறு சந்தைக்குச் சந்தை பெருமளவில் மாறுபட்டது என்பதை கூறினர். இதன் விளைவாக, பல தர நியமங்களுக்கு இயைந்தொழுக வேண்டியதனால் வர்த்தகர்களுக்கு ஏற்படும் செலவைக் குறைப்பதற்கு நாடுகள் இருதரப்பு மற்றும் பிராந்திய ஒப்பந்தங்களை செய்துகொள்கின்றன. தர நியமங்களை இசைவாக்குதல் அத்தகையதோர் ஒப்பந்தமாகும்.

[16] தர நியமங்கள் மற்றும் இசைவு மதிப்பீடு துறைகளில் வெளிநாட்டு வர்த்தகத்துக்கான கொள்கையை அமுல்படுத்தல்: "கருவிப் பெட்டி". ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு. 2001.

[17] டெவரொக்ஸ், சீ, லோரன்ஸ், ஆர் மற்றும் வொட்கின்ஸ், எம்டீ,"ஐக்கிய அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தைகளில் விடய ஆய்வுகள்: விதிகளை ஆக்குதல்". சர்வதேச பொருளியல் நிறுவகம் 2006.

[18] துப்பரவேற்பாட்டு மற்றும் உடல் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகளின் பிரயோகம் தொடர்பான WTO ஒப்பந்தம்.

[19] SPS ஒப்பந்தத்தின் உறுப்புரை 3.1.

[20] TBT ஒப்பந்தத்தின் உறுப்புரை 2.4.

[21] தர நியமங்கள் மற்றும் இசைவு மதிப்பீடு துறைகளில் வெளிநாட்டு வர்த்தகத்துக்கான கொள்கையை அமுல்படுத்தல்: "கருவிப் பெட்டி". ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு. 2001, 11.

வர்த்தகத்திற்கு வசதியேற்படுத்துவதற்காக தரநியமங்களை இசைவாக்கியுள்ள இரண்டு பிராந்திய குழுக்களாகும்.[22]

*மட்டுப்பாடுகள்:* தரநியமங்களின் இசைவாக்கலை WTO ஊக்குவித்தபோதிலும், அதுவே மிகவும் பயன்மிக்க தீர்வாகுமென்று SPS முன்மொழிந்தபோதிலும[23], பின்வரும் காரணங்களினால் அது நடைமுறையில் அடைவதற்கு மிகவும் சிரமமான, காலவிரயமிக்க இலக்கு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது:

- *நீண்ட பேச்சுவார்த்தைகள்:* இரு நாடுகளினாலும் பின்பற்றப்படும் தரநியமங்கள் மிகவும் வித்தியாசமானவையெனில், வெவ்வேறு வகை ஏற்றுமதிகளுக்குப் பொருத்தமானதொரு தரநியமத்தைத் தீர்மானிப்பதற்கு இரு தரப்பிற்குமிடையே பெருமளவு பேச்சுவார்த்தைகளும் கலந்துரையாடல்களும் தேவை. உதாரணமாக, ஒரு நாடு தனது தரநியமத்தை குறைப்பதற்கு இணங்கவேண்டியிருக்கலாம் அல்லது மற்ற நாடு தனது தரநியமத்தை அதிகரிக்கவேண்டியிருக்கலாம். பொதித் தொகுதி பெரிதாகவிருக்குமிடத்து, இது விஷேடமாக ஒரு கடினமான காரியமாகும். 1980 களின் ஆரம்பத்தில் ஐரோப்பாவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனைத்து உறுப்பு நாடுகள் மத்தியிலும் பேச்சுவார்த்தையும் கருத்தொருமைப்பாடும் தேவைப்பட்ட ஒரு நடைமுறையின் வாயிலாக பொதுவான தரநியமங்களை ஏற்படுத்துவதற்கான ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது.[24] எனினும், உறுப்பு நாடுகள் வெவ்வேறு நலன்களைக் கொண்டிருந்தமையினால், அதன் முன்னேற்றம் மிகவும் மந்தமாகவிருந்தது.[25]
- *செலவுகூடிய செவ்வையாக்கல்கள்:* விதிகளை இசைவாக்குவதற்கு ஒரு தரப்பின் விதிகளை மற்றத் தரப்பின் விதிகளுக்குச் சமமாக கொண்டுவருவதன்மூலம் (விண்ணப்பதாரர்களின் நாடுகளில் உள்ளதுபோல) அல்லது முற்றிலும் புதிய விதிகளை விருத்தி செய்வதன்மூலம் விதிகளில் இசைவாக்கமாதல் தேவை. அத்தகைய நடைமுறைகள் நிர்வாக ரீதியாகவும் புதிய தரநியமங்களுக்கு இயைந்தொழுகவேண்டியிருக்கும் பொருள் வழங்குநர்களுக்கும் செலவு மிக்கவையாகும். இதற்கு தேசிய தர உட்கட்டமைப்பை (QI) சர்வதேச வழக்கங்களுடன் ஒத்திசைக்க வேண்டும்.[26] மேலும், இசைவாக்கலின் விளைவாக, கூடிய தரநியமங்களுக்கு இயைந்தொழுகவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகக்கூடிய உள்நாட்டுத் தயாரிப்பாளர்களுக்கு இது செலவு கூடிய செவ்வையாக்கலாகும்.[27]
- *உள்நாட்டு அரசாங்கங்களின் தெரிவை மட்டுப்படுத்துகிறது:* நாட்டின் விசேட பொருளாதார, சமூக மற்றும் சூழல் தேவைகள் நுகர்வோர் மற்றும் உள்நாட்டுக் கைத்தொழில்களின் இயலளவு ஆகியவற்றிற்கு மிகவும் சிறப்பாகப் பொருந்துகின்ற பொருத்தமான மட்டங்களில் தேசிய தரநியமங்களை நிர்ணயிப்பதற்கான அரசாங்கங்களின் ஆற்றலை இசைவாக்குதல் தடுக்கிறது.[28]
- *சான்றிதழ்களின் பரஸ்பர அங்கீகாரம் என்று பொருள்படுவதில்லை:* பிரயோகிக்கப்படும் விதிகள் வர்த்தகப் பங்காளர்களுக்கிடையே ஒரே மாதிரியானவையாக அல்லது குறைந்தபட்சம் தொழில்நுட்பரீதியாக இசைவானதாக இருக்க வேண்டுமென்பதை இசைவாக்கல் உறுதிப்படுத்துமெனினும், ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுகுதலை உறுதிப்படுத்தும் சான்றுப் பத்திரங்களை வர்த்தகப் பங்காளர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று அது உத்தரவாதமளிக்கவில்லை. இரு நாடுகளினதும் விதிகள் ஒரே மாதிரியானவையாக இருக்கின்றபோதுகூட, ஒரு நாட்டினால் வழங்கப்படும் இசைவுச் சான்றிதழை ஏற்றுக்கொள்வது மற்ற நாட்டின் CAPகளில்

[22] பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தம் தொடர்பான வயுஊனு சுருக்கப் பத்திரம்.

[23] WTO SPS ஒப்பந்தத்தின் உறுப்புரை 3.1

[24] Ibid

[25] Ibid

[26] மோா், ஜே.சீ மற்றும் ஷெபட், பீ. “விருப்புக்குரிய ஒப்பந்தங்கள், பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் தர நியமங்கள்”. உலக வர்த்தக நிறுவனம். 2011.

[27] “தர நியமங்கள் மற்றும் இசைவு மதிப்பீடு துறைகளில் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான அமுலாக்கல் கொள்கை: கருவிப் பெட்டி”. ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு. 2001, 11.

[28] மோா், ஜே.சீ மற்றும் ஷெபட், பீ. “விருப்புக்குரிய ஒப்பந்தங்கள், பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் தர நியமங்கள்”. உலக வர்த்தக நிறுவனம். 2011.

இறக்குமதி செய்யும் நாடு கொண்டிருக்கும் நம்பிக்கையிலும் CABகளின் ஆற்றலையும் அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது. எனவே, முழுப் பயனையும் அடைவதற்கு இசைவாக்கல் தர நியமங்களுடன் கூடவே இசைவுச் சான்றிதழின் பரஸ்பர அங்கீகாரமும் தேவை.[29]

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் தர நியமங்களின் இசைவாக்கல் ஒரு நீண்டகால இலக்காகும் என்பதோடு, ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கம் உடனடிப் பிரச்சினைகளை அது தீர்த்து வைக்காது. 2006ஆம் ஆண்டில் இத்தகைய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டதன் பின்னரும்கூட அதன் ஏற்பாடுகளை அமுலாக்குவதை நோக்கி இரு நாடுகளும் எவ்வித முன்னேற்றமும் காணவில்லை என்பதிலிருந்து இது தெளிவாகின்றது.[30] இந்தத் தீர்வு இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள நிறுவனங்களிலிருந்து பெறப்படும் சான்றிதழ்களை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்தரவாதவளிக்கவுமில்லை. ஆவணங்களினாலும் ஏற்றுமதியாளர் நேர்முகங்களினாலும் பகுதி 1.3.2 இல் கோடிட்டுக் காட்டப்பட்ட தற்போதைய பிரச்சினைகள் தர நியமங்கள் பூர்த்தி செய்யப்பட்டனவா என்பதை சோதனை செய்வதற்கான CAP கள் தொடர்புபட்டவையேயன்றி அந் நியமங்கள் தொடர்புபட்டவை அல்ல.

## 2.2. ஒத்ததன்மை ஒப்பந்தங்கள்

ஒத்தத் தன்மை ஒப்பந்தங்கள் ஒரு உற்பத்தி அளவுகோளுக்கு இரண்டு வேறுபட்ட நியமங்கள் அல்லது ஒழுங்குபடுத்தல் நடைமுறைகளைப் பேணுவதற்கு நாடுகளுக்கு இடமளிக்கிறது. எனினும், இரு தர நியமங்களும் ஒரே குறிக்கோளை அடைவதற்காக அமுல்படுத்தப்படுவதால் அவற்றை சமமானதென கருதுகின்றன.

*குறிக்கோள்கள்*: ஒத்தத் தன்மை இரண்டு வேறுபட்ட தர நியமங்கள் ஒன்றுக்கொன்று மாற்றுவழியாக செயற்படுவதை அனுமதிக்கின்றது. SPS ஒப்பந்தம் மற்ற உறுப்பு நாடுகளின் துப்பரவேற்பாட்டு மற்றும் தாவரத்துாய்மை நடவடிக்கைகள் தமது அந் நடவடிக்கைகளுக்கு மாறுபட்டதாக இருந்தபோதிலும்கூட அவற்றைச் சமமானதாகக் கருதி நடத்த அரசுகளுக்கு ஊக்கமளிக்கிறது. இந் நடவடிக்கைகள் வேறுபட்டிருப்பினும், அந் நடவடிக்கைகளுக்கான குறிக்கோள் ஒன்றே என்று இந் நாடுகள் எடுத்துக் காட்ட முடியுமாயின், அவை சமமானவையாகக் கருதி நடத்தப்படும்.[31] இது போன்ற ஏற்பாடுகள் தொழில்நுட்ப ஒழுங்குவிதிகள் தொடர்பிலும் காணப்படுகின்றன.[32]

*அமுலாக்கம்*: முதலாவதாக, ஒரு ஒழுங்குவிதியின் குறிக்கோள்கள் விதித்துரைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் இக் குறிக்கோள்கள் சமமானவையாக இருப்பதாக இணங்கிக் கொள்ளப்பட வேண்டும். இறுதியாக, அவற்றின் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மை தொடர்பாக இணக்கமொன்று எட்டப்பட வேண்டும். இது, விளக்கமாக, துறை ரீதியாக செய்யப்பட வேண்டியிருப்பதால் ஒரு சிக்கலான நடைமுறையாகும். ஏனைய நாடுகள் செய்துகொண்டுள்ள ஒத்த தன்மை ஒப்பந்தங்களுக்கான உதாரணங்களுள் அமெரிக்க – கொரிய சேதன ஒத்த தன்மை ஒப்பந்தம் (2014) மற்றும் அமெரிக்க – ஜப்பான் சேதன ஒத்த தன்மை ஒப்பந்தம் (2013) என்பவற்றைக் குறிப்பிடலாம்.[33]

---

29 “தர நியமங்கள் மற்றும் இசைவு மதிப்பீடு துறைகளில் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான அமுலாக்கல் கொள்கை: கருவிப் பெட்டி”. ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு. 2001> 11.

30 இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்துக்கும் இந்திய தர நியமங்கள் பணியகத்துக்கும் இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம். 2006.

31 SPS ஒப்பந்தத்தின் உறுப்புரை 4.1

32 TBT ஒப்பந்தத்தின் உறுப்புரை 2.7

33 https://www.ota.com/resources/global-market-opportunkties/trade-access-barriers/trade-agreements/us-japan-equivalency

*மட்டுப்பாடுகள்*: சாத்தியவாய்ப்பு கொண்ட ஒரு சக்தி மிக்க கருவியாகவும் WTO TBT ஒப்பந்தத்தில் பரிந்துரைக்கப்பட்ட ஒன்றாகவும் இருக்கும் அதேவேளை, இந்த பொறிமுறை நடைமுறையில் தொழில்நுட்ப ரீதியாக சிக்கலானதாக இருக்கக்கூடும். மேலும், தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கான எந்தவொரு கணிசமான மீளாய்வு அல்லது நவீனப்படுத்தல் (உதாரணமாக. தொழில்நுட்ப முன்னேற்றத்தைக் கணக்கிலெடுப்பதற்கு) புதிய ஒரு தீர்மானத்தை மேற்கொள்ளக்கூடும் என்பதோடு, ஒத்தத் தன்மையின் அங்கீகாரமும் தேவை. இக் காரணங்களினால் மிகவும் எளிதான இந்த கோட்பாடு பொதுவான பிரயோகத்திற்காக கவனத்திலெடுக்கப்படுவதில்லை.[34]

ஒரு ஒத்தத் தன்மை ஒப்பந்தம் தரப்பினரின் ஒழுங்குபடுத்தல் தன்னாதிக்கத்தை முழுமையாக மதிக்கும் அதேவேளை, வர்த்தகத்திற்கு வசதியேற்படுத்துகின்றமையால் அதுவொரு பெறுமதி மிக்க ஆவணமாகும்.[35] எனினும், நியாயாதிக்கங்கள் மத்தியில் ஒழுங்குபடுத்தல் வேறுபாடுகள் மிகக் குறைவாக இருக்குமிடத்து இம் முறைமை கூடியளவு சாத்தியமானதாக இருக்கக்கூடும். அத்துடன், அபிவிருத்தியினதும் வருமானத்தினதும் அளவுகள் ஒப்பிடத்தக்கவையாக இருக்குமிடத்து மிகவும் உணர்வுபூர்வமான விடயங்களை எடுத்துக் காட்டாது.[36]

## 2.3. வெளிநாட்டுத் தயாரிப்பாளர்களை ஏற்றங்கீகரித்தல்:

வெளிநாட்டுத் தயாரிப்பாளர்களை ஏற்றங்கீகரித்தலானது, எந்த நாட்டுக்கு பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவோ அந்த நாட்டின் தேசிய தர நியமங்கள் அமைப்பிடமிருந்து வெளிநாட்டுத் தயாரிப்பாளர்கள் நேரடியாக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதைக் குறிக்கும்.

குறிக்கோள்: இம் முறைமையினூடாக வெளிநாட்டு தயாரிப்பாளர்கள் உரிய தேசிய தர நியம அடையாளத்தை அக் குறிப்பிட்ட நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களில் இடுவது சாத்தியமானதாகவிருக்கும். இது, துறைமுகங்களிலிருந்து பொருட்கள் விரைவாக விடுவிக்கப்படுவதற்கு வசதியேற்படுத்துகிறது.

அமுலாக்கம்: இது தொடர்பாக இந்திய BIS ஒரு பொருள் சான்றுப்படுத்தல் திட்டத்தைப் பேணுகின்றது. இத் திட்டத்தினூடாக வெளிநாட்டுத் தயாரிப்பாளர் ஒருவர் பொருளின் இந்திய தர நியமங்களோடான இசைவை உறுதி செய்ததன் பின்னர், அப் பொருளின் மீது BIS தரங்கள் அடையாளத்தைப் பதிக்கலாம்.[37]

இந்த நடைமுறைக்கு வசதியேற்படுத்துமுகமாக:

- BIS பரிசோதகர்கள் உற்பத்தி தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதற்காக வெளிநாட்டு தயாரிப்பாளரின் செலவில் தயாரிப்பாளர் நாட்டுக்கு பயணம் செய்வார்கள்.
- திருப்தியுற்றால் BIS பரிசோதகர்கள் அக் கம்பனியையும் அதன் உற்பத்தி முறைமையையும் முன்சான்றுப்படுத்தி அதன் பின்னர், அக்கம்பனி குறித்துரைக்கப்பட்ட தரங்களை பேணுவதை உறுதிப்படுத்துமுகமாக ஒரு சுயாதீன பரிசோதகரால் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் கண்காணிபபிற்கும் இயைந்தொழுகலுக்கும் அதிகாரமளிப்பர்.
- ஏற்றுமதியாளர் இந்தியாவில் சமூகமளித்திருக்க வேண்டும் /அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை அது நியமிக்க வேண்டும். இப் பிரதிநிதி இத் தயாரிப்பாளருக்கும் BIS

---

34 "தர நியமங்கள் மற்றும் இசைவு மதிப்பீடு துறைகளில் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான அமுலாக்கல் கொள்கை: கருவிப் பெட்டி". ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு. 2001, 12.

35 Ibid

36 ஒஸ்போன்,கே. "வர்த்தக சூழலை மேம்படுத்தல்" 2002,6.

37 வெளிநாட்டு தயாரிப்பாளர்கள் சான்றுப்படுத்தல் திட்டத்தின் (FMCS) கீழ் BIS உரிமங்கள் வழங்கலுக்கான நடைமுறை, இந்திய தர நியமங்கள் பணியகம்.

இறக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய அவ் வெளிநாட்டு தயாரிப்பாளர் சார்பாக BIS இன் ஏற்பாடுகளுக்கு அப் பொருள் இயைந்தொழுகுவதற்கு பொறுப்பாக இருப்பார்.

மட்டுப்பாடுகள்: எனினும், இச் சான்றுப்படுத்தும் முறையானது, அதற்குத் தாக்குப்பிடிக்கத்தக்க ஒரு நாட்டில் உள்ள ஒருசில பேரளவு வர்த்தகர்களுக்கு மட்டுமே உதவும். தனியாள் ஏற்றுமதியாளர் ஏற்றுமதி செய்யும் நாட்டின் தேசிய தர நியமங்கள் அமைப்பினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் செலவை ஏற்க வேண்டியிருக்கும். மேலும், ஏற்றுமதியாளர் ஏற்றுமதி செய்யும் நாட்டினால் விதிக்கப்பட்ட தர நியமங்களுக்கான பரிசோதனையில் தெரிவாகக்கூடியதாக தொழிற்சாலைகளில் முதலீடு செய்யவேண்டியிருக்கும். மேலும், பேட்டி காணப்பட்ட ஏற்றுமதியாளர்களுள் பெரும் எண்ணிக்கையிலானோர் இந் நடைமுறை ஓர் வருடாந்த அடிப்படையில் BIS இனால் சோதனை மேற்கொள்ளப்படுவதினால் நீண்டதும் தொல்லை மிக்கதும் மற்றும் கால விரயமானதுமென எடுத்துக் காட்டினர்.

## 2.4. இசைவு மதிப்பீட்டு நடைமுறையின் பரஸ்பர அங்கீகாரம் (CAPs)

CAP தொடர்பான பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தம் (MRA) இறக்குமதி செய்யும் நாட்டின் தேசிய தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றோடு ஏற்றுமதிப்பொருட்கள் இசைவாகவிருப்பதை மதிப்பிடுவதற்கான மற்ற (ஏற்றுமதி) நாட்டின் இசைவு மதிப்பீட்டு நிறுவனத்தின் (CAB) திறனையும் இயலளவையும் அங்கீகரிப்பதற்கு பங்காளர் நாடுகள் பரஸ்பரம் இணங்கிக்கொள்ளும் ஒரு ஒப்பந்தமாகும்.

குறிக்கோள்: CAP களிலான MRA கள் இரண்டு வர்த்தகப் பங்காளர்கள் தமது சொந்த தர நியமங்களையும் ஒழுங்குவிதிகளையம் பேணுவதற்கு அனுமதிக்கின்றது. ஏற்றுமதி செய்யும் நாட்டில் வழங்கப்படும் இசைவுச் சான்றிதழ்கள் இறக்குமதி செய்யும் நாட்டில் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு அனுமதிப்பதன் மூலம் CAP கள் தொடர்பான காலம் மற்றும் செலவு ஆகியவற்றை பொருட்கள் கப்பலேற்றப்படுவதற்கு முன்னர் ஏற்றுமதி நாட்டிற்கு மாற்றுகின்றது.

அமுலாக்கம்: CAP களிலான MRA கள் இறக்குமதி செய்யும் நாட்டின் சட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக ஏற்றுமதி செய்யும் தரப்பு தமது சொந்த நாட்டில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் பொருட்களை பரிசோதித்து சான்றுப்படுத்துவதற்கு இடமளிக்கிறது. ஒவ்வொரு இறக்குமதி செய்யும் தரப்பும் ஏற்றுமதி செய்யும் தரப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்ட CAB களால் வழங்கப்படும் பரிசோதனை அறிக்கைகள் சான்றுப்பத்திரங்கள் மற்றும் அங்கீகாரங்கள் ஆகியவற்றை அங்கீகரிப்பதற்கு இணங்குகின்றது. எனவே, இறக்குமதிப் புள்ளியில் மேலதிக இசைவு மதிப்பீட்டு நடைமுறைகளுக்கு உள்ளாகாமல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு இறக்குமதி செய்யும் நாடுச் சந்தைகளில் இடப்படலாம்.[38]

இத்தகைய MRA கள் வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் தரநியமங்கள் மற்றும், ஒழுங்குவிதிகளின் முழுமையான இசைவாக்கலின்றி, இறக்குமதி செய்யும் நாட்டின் உள்நாட்டுச் சந்தைக்குள் பிரவேசிப்பதற்கான தடைகளைக் குறைக்கின்றன.

இறக்குமதிப் புள்ளியில் இசைவை மதிப்பிடுவதற்கு இறக்குமதி செய்யும் நாட்டினால் பின்பற்றப்படும் தற்போதைய நடைமுறை ஒவ்வாததாக, நியாயமற்றதாக, தொல்லை மிக்கதாக மற்றும் செலவு மிக்கதும் கால விரயமானதுமாக இருப்பின், வர்த்தகப் பங்காளர்களுக்கு ஒரு MRA பயன்மிக்கதொரு ஏற்பாடாகும். அத்தகைய நடைமுறைக்கான உதாரணங்கள் சில பின்வருமாறு: இறக்குமதிப் புள்ளிக்கு அருகில் இல்லாத ஆய்வுகூடங்களுக்கு மாதிரிகள் அனுப்பப்படுகின்றன அத்துடன்/அல்லது பரிசோதனை அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு ஆய்வுகூடங்கள் கணிசமான அளவு நேரம் எடுக்கின்றன. பொருள் அழியத்தக்க ஒன்று

[38] "தர நியமங்கள் மற்றும் இசைவு மதிப்பீடு துறைகளில் வெளிநாட்டு வர்த்தகத்திற்கான அமுலாக்கல் கொள்கை: கருவிப் பெட்டி". ஐரோப்பிய சமூகங்களின் ஆணைக்குழு. 2001.

எனினும், துறைமுகத்தில் குளிரூட்டப்பட்ட களஞ்சிய வசதிகள் இல்லை. அல்லது, களஞ்சிய செலவுகள் மிக அதிகமாகவும் இறக்குமதி செய்யும் நாட்டினால் பரிசோதனைக்கு அறவிடப்படும் கட்டணங்கள் நியாயமற்ற வகையில் அதிகமாகவும் உள்ளன.

ஒரு MRA யின் பயன்களுள்:[39]

- பொருளுடன் உரிய சான்றுப் பத்திரங்களும் அனுப்பப்படுமாயின் பிரவேசப் புள்ளியில் அப் பொருட்கள் மீண்டும் சோதனை செய்யப்பட வேண்டியதில்லை என்பதால், பொருட்களை ஏற்றுமதி செய்வதோடு தொடர்புடைய குறைந்த காலமும் செலவுகளும்,
- பொருட்களை தமது சொந்த நாட்டு எல்லையிலிருந்து வர்த்தகப் பங்காளரது பகுதிக்கு நகர்த்துவதில் மேம்பட்ட எதிர்வுகூறலும் துல்லியத்மன்மையும்,
- நுழைவுப் புள்ளியில் சான்றுப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதாக வர்த்தகப் பங்காளர் இயைந்தொழுக் வேண்டிய நடைமுறைகளை இவ்வொப்பந்தம் தெளிவாக விதித்துரைக்க வேண்டியிருப்பதனால் அதிகரித்த வெளிப்படைத் தன்மை,
- இயலளவை மதிப்பிடுவதற்கும் இயைந்தொழுகலை உறுதிப்படுத்துவதற்கும் பங்காளர் நாடுகளிலுள்ள CAB கள் ஒன்றோடொன்று இணைந்து செயற்பட வேண்டும். இந்த ஒத்துழைப்பு பங்காளர் நாடுகளிலுள்ள CAB களுக்கிடையே மேம்பட்ட தொடர்பாடலுக்கும் செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பிற்கும் இட்டுச் செல்லும். அது பின்னர், இயைந்தொழுகல் தொடர்புபட்ட பிரச்சினைகளின் துரித தீர்வுக்கு வசதியேற்படுத்தும்.
- CAP கள் தொடர்பான MRA கள் எண்ணக்கருவானது, ஒரு புதிய விடயமல்ல. இந்த ஆவணத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு பல்வேறு நாடுகளுக்கிடையே பல்வேறு துறைகளுக்கான MRA களுக்கு வசதியேற்படுத்தப்பட்டுள்ளது. தரநியமங்களிலான வேறுபாடு அதிகமாகவும் இரு நாடுகளினதும் வருமான மட்டங்கள் சமனற்றதாகவும் இருக்குமிடத்து, MRA ஒன்றை செய்துகொள்வது கூடிய சாத்தியமானதாகும். இந்தத் தீர்வுக்கு தரநியமங்களின் இசைவாக்கல் தேவையில்லை என்பதால் இவ்வொப்பந்தம் ஒப்பீட்டளவில் ஒரு குறுகிய காலப்பகுதியில் அமுல்படுத்தப்பட முடியும்.
- நாடுகளுக்கிடையே வர்த்தகத்தை ஊக்குவிப்பதில் MRA கள் ஒரு பயனுள்ள கருவியாகுமென்பதை சான்றுகள் எடுத்துக் காட்டியுள்ளன. ஷென் (Chen) மற்றும் மட்டு (Mattoo) (2008) ஏனைய நாடுகளுடனான (ஐரோப்பிய ஒன்றியமல்லாத) இசைவு மதிப்பீட்டை உள்ளடக்கி ஐரோப்பிய MRA களின் பலாபலன்கள் தொடர்பான ஒரு ஆய்வை மேற்கொண்டனர்.[40] இசைவு மதிப்பீட்டு MRA கள் தரப்புகளிடையே வர்த்தகத்தை சமச்சீராக ஊக்குவிக்கின்றன என இந்த ஆய்வு கண்டறிந்தது. இந்த முடிவு பெலரினாலும் (Baller) (2007) உறுதிசெய்யப்பட்டது.[41] இதேபோன்ற சான்றுகள், ஏன் (An) மற்றும் மஸ்குஸ் (Maskus) (2009) பயன்படுத்தப்பட்டது. அந்த ஆய்வின்படி, அபிவிருத்தி அடைந்துவரும் நாட்டு ஏற்றுமதியாளர்கள் மீது சர்வதேச நியம இசைவாக்கம் ஏற்படுத்துவதை விட கூடிய வலிமையான நன்மைபயக்கும் பலாபலன்களை MRA கள் ஏற்படுத்தும்.[42] ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு (APEC) நாடுகள் எட்டு உறுப்பு நாடுகளுக்கிடையே உணவுப் பொருள் வர்த்தகத்திற்கு வசதியேற்படுத்துமுகமாக உணவு மற்றும் உணவுப்பொருள் இசைவு மதிப்பீடு தொடர்பான ஒரு MRA ஐக் கொண்டுள்ளன. இறக்குமதி செய்யும் நாட்டின் CAPகள் தாமதங்களை ஏற்படுத்தி ஏற்றுமதியாளரின் செலவைக் கூட்டுமிடத்து, CAP கள் தொடர்பான MRA கள் பயன்மிக்கதொரு கருவியாக அமையும்.

---

[39] "பரஸ்பர அங்கீகரிப்பு ஏற்பாடு/ஒப்பந்தமொன்றை விருத்தி செய்வதற்கான வழிகாட்டுநெறிகள்". உலக சுங்க நிறுவனம் 2011.

[40] சப்போர்,ஜே.பி மற்றும் மோர், ஜே.சீ, விருப்பிற்குரிய அபிவிருத்திக்கான வர்த்தக ஒப்பந்தங்கள்: ஒரு கைந்நூல், உலக வங்கி, 2011.

[41] Ibid

[42] Ibid

மட்டுப்பாடுகள்: இறக்குமதி செய்யும் நாட்டினால் விதிக்கப்படும் தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இசைவை மதிப்பிடும் பெறுப்பை இறக்குமதி செய்யும் நாட்டிடமிருந்து ஏற்றுமதி செய்யும் நாட்டிற்கு மாற்றுவதில் மாத்திரமே MRA கள் கவனம் செலுத்துகின்றன. அது இறக்குமதி செய்யும் நாட்டின் தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் செல்லுபடித்தன்மையை எதிர்த்து சவால்விடுவதில்லை. எனவே, இறக்குமதி செய்யும் நாட்டின் திருப்திக்கேற்ப CAP களை நிறைவேற்றுவதற்கான திறனும் நம்பகத்தன்மையும் ஏற்றுமதி செய்யும் நாட்டு CAB களிடம் இருந்தால் மட்டுமே ஒரு MRA ஏற்றுமதியாளருக்குப் பயன்விளைவிக்கும். CAB களிடம் தேவையான உபகரணங்களும் தொழில்நுட்ப திறனும் இருக்கவேண்டும் என்பதும் அவை இறக்குமதி செய்யும் நாட்டு தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இசைவை மதிப்பிடுவதற்கு ஆற்றலுள்ளவையாக இருப்பதாக மூன்றாம் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பதும் இதன் பொருளாகும். மேலும், ஏற்றுமதி செய்யும் நாட்டு CAB கள் வினைத்திறன் மிக்கவையாகவும் தொடர்ந்தேர்ச்சியானவையாகவும் வெளிப்படைதன்மையானதாகவும் நியாயமானதாகவும் இருப்பதும் எடுக்கும் காலமும் ஆகும் செலவும் இறக்குமதி செய்யும் நாட்டினதையும்விட குறைவானதாகவும் இருக்கும்சந்தர்ப்பங்களுக்கு மட்டும் MRAகள் மட்டுப்படுத்தப்படுகின்றன. ஏற்றுமதி செய்யும் நாட்டிலுள்ள ஆய்வுகூடங்கள் துறைமுகத்திற்கு அருகிலுள்ளவிடத்தும் சோதனை அறிக்கைகள் ஒரே நாளில் (அல்லது சில மணித்தியாலங்களில்) சமர்ப்பிக்கப்படுமிடத்தும் இதுவே நிலைமையாகும். தாமதங்கள் ஏற்படின், ஏற்றுமதியாளருக்குத் தாமதத்திற்கான காரணம் அறிவிக்கப்படும் அத்துடன்/அல்லது செலவு இறக்குமதி செய்யும் நாட்டிற்கு ஏற்பட்டச் செலவைக் காட்டிலும் குறைவானதாகவிருக்கும்.

முன்மொழியப்பட்டுள்ள தீர்வுகளுள் CAP கள் தொடர்பான MRA கள்தான் அமுலாக்கலுக்கு மிகவும் சாத்தியமானதென்று இந்த ஆய்வு முடிவு செய்கிறது. ஆராயப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் பலம், பலவீனங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை உரு. 3 வழங்குகிறது. மேலும்,இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகத்தில் CAP கள் தொடர்பான ஒரு MRA ஏன் மிகவும் பொருத்தமானதென்பதை பகுதி III ஆராய்கிறது.

உரு 3: முன்மொழியப்பட்ட தீர்வுகளின் பலமும் பலவீனமும்

| தீர்வு | அனுகூலங்கள் | சவால்கள் |
|---|---|---|
| **இசைவாக்கல்** | நாடுகள் மத்தியில் தர நியமங்களில் தொடர்ந்தேர்ச்சி<br><br>WTO SPS ஒப்பந்தங்களால் ஊக்குவிக்கப்படுகிறது<br><br>இரட்டை சோதனையை தவிர்க்கும். | நீண்ட பேச்சுவார்த்தைகள்<br><br>ஒழுங்குபடுத்துவோருக்கும் தயாரிப்பாளருக்கும் செலவு மிக்க செவ்வையாக்கல்<br><br>நாட்டுக்கேயுரிய நியமங்களை மட்டுப்படுத்தும். |
| **ஒத்த தன்மை ஒப்பந்தங்கள்** | வர்த்தகப் பங்காளர்களின் ஒழுங்குபடுத்தல் தன்னாதிக்கத்தை தக்கவைக்கும்<br><br>இரட்டைச் சோதனையைத் தவிர்க்கும் | அமுலாக்குவதற்கு தொழில்நுட்ப ரீதியாக சிக்கலானது |
| **வெளிநாட்டு தயாரிப்பாளர்களை ஏற்றங்கீகரித்தல்** | இறக்குமதி செய்யும் நாட்டின் தரநியமங்கள் அமைப்பினால் சான்றுப்படுத்தப்பட்ட பொருட்கள் | செலவுமிக்கது<br><br>கைத்தொழில் ரீதியான ஒரு தீர்வல்ல |
| **CAP கள் தொடர்பான ஆசுயு** | குறைந்த நேரமும் செலவும் கூடிய வெளிப்படைத் தன்மை<br><br>மேம்பட்ட தொடர்பாடல் மற்றும் ஒருங்கிணைப்பு | இரட்டை சோதனையை தவிர்க்காது<br><br>தரநியமங்களை சோதிப்பதற்கான ஊயுடீகளின் திறனும் நம்பகத்தன்மையும் |

# பிரிவு III– முன்னோக்கிய பாதை

இந்தியாவுக்கான இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு NTB யாகவிருக்கும் நீண்டதும் செலவு மிக்கதுமான CAPகள் பிரச்சினையை தீர்ப்பதற்கு உள்ள தீர்வுகளை முன்னைய பகுதி விளக்கியது. CAPகள் தொடர்பான ஒரு MRA ஏன் மிகவும் சாத்தியமான தீர்வு என்பதையும் அத்தகையதோர் ஒப்பந்தம் முழுமையாக வெற்றிபெறத்தக்கதாக அதற்கு எவ்வாறு வசதியேற்படுத்தப்பட வேண்டும் என்பதையும் இந்தப் பகுதி விபரிக்கும். CAPகள் தொடர்பான MRA இன் வெற்றிகரமான அமுலாக்கத்திற்கான சில பரிந்துரைகளையும் அது வழங்கும். இப் பகுதியில் உள்ளடக்கப்படும் முக்கிய துறைகளாவன:

- இந்தியாவுடனான CAPகள் தொடர்பான ஒரு MRA ஏன் “மிகச்சிறந்த” தீர்வு
- CAPகள் தொடர்பான ஒரு MRA எவ்வாறு செயற்படும்?
- அமுலாக்கலுக்கான பரிந்துரைகள்
  - உத்தேச CEPA விலிருந்து MRA வைப் பிரித்தெடுத்தல்
  - அமுலாக்கத்திற்கு கட்டங் கட்டமானதோர் அணுகுமுறையைப் பின்பற்றுக
    - முன்னுரிமைப் பொருட்களைத் தெரிவு செய்தல்
    - பொருத்தமான CAP களையும் CAB களையும் இனங்காணல்
    - தேவையான CAP களை நடத்துவதற்கும் MRA வை அமுலாக்குவதற்குமான CAB களின் திறனையும் நம்பகத் தன்மையையும் மதிப்பிடுதல்
  - ஏற்றுமதி பரிசோதனைத் திட்டம்/அமைப்பொன்றைத் தாபித்தல்

## 3.1. இந்தியாவுடனான CAP கள் தொடர்பான ஒரு MRA ஏன் “மிகச்சிறந்த” தீர்வு

இந்திய சந்தைகளுக்கான இலங்கை ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் இயைந்தொழுகல் பிரச்சினைகளுக்கான மிகவும் நடைமுறைச் சாத்தியமான தீர்வு இந்தியாவுடன் CAP கள் தொடர்பான ஒரு MRA வை செய்துகொள்வதாகும் என்று பகுதி 2.4 தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. தரநியமங்களின் இசைவுபடுத்தலை வேண்டிநிற்கும் ஒரு ஒப்பந்தத்தோடு ஒப்பிடுகையில் CAP கள் தொடர்பான ஒரு MRA அமுலாக்கவதற்கு எளிதானதாகும். ஏனெனில், அது ஒவ்வொரு நாடும் தனது சொந்த தரநியமங்களை வைத்துக்கொள்வதற்கு இடமளிக்கிறது. ஏற்றுமதி நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட, அதிகாரபூர்வ மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இசைவு மதிப்பீட்டுச் சபைகளால் (CAB) வழங்கப்படும் இசைவுச் சான்றிதழை ஏற்றுக்கொள்ள ஒவ்வொரு நாடும் இணங்குவதே ஒரே தேவைப்பாடாகும். இச் சான்றுப் பத்திரம் அப் பொருள் இறக்குமதி செய்யும் நாட்டின் தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை பூர்த்தி செய்கின்றதென உறுதிப்படுத்தும். ஏற்றுமதிப் புள்ளியில் இசைவு மதிப்பீடு செய்யப்பட்டு உறதிப்படுத்தப்படுவதனால் ஏற்றுமதியாளர் இறக்குமதிப் புள்ளியில் இயைந்தொழுகலை நிரூபிக்க வேண்டிய தொல்லைக்குள்ளாக வேண்டியதில்லை (உரு 4).

மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான ஒரு MRA க்கான சாத்தியம் பின்வரும் காரணங்களினால் தெளிவானதாகவுள்ளது:

(அ) இந்தியாவின் புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் MRA களை செய்துகொள்வதற்கான ஏற்பாடுகளை ஏற்கெனவே கொண்டுள்ளன

இலங்கையோடு FTA வை கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து இந்தியா பல சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை செய்துகொண்டுள்ளது.[43] இவ்வொப்பந்தங்களில் தெரிவுசெய்யப்பட்ட பொருட்கள் தொடர்பாக MRA களை செய்துகொள்வதற்கான தெளிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக- இந்திய - ஜப்பான் ஒப்பந்தத்தின்[44] உறுப்புரை 55,. இந்திய – சிங்கப்பூர் ஒப்பந்தத்தின்[45] உறுப்புரை 5.1, இந்திய – மலேசியா ஒப்பந்தத்தின்[46] உறுப்புரை 7.2 மற்றும் இந்திய – கொரியா ஒப்பந்தத்தின்[47] உறுப்புரை 2.28 ஆகியன பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தங்களைக் குறிக்கும்.

(ஆ) ஒரு FTA இல்லாமலே இந்தியா வர்த்தகப் பங்காளர்களுடன் MRA களை செய்துகொண்டுள்ளது

இந்தியாவும் சீனாவும் ஒவ்வொரு நாட்டினதும் தர நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இயைந்தொழுகலுக்கு வசதியேற்படுத்துமுகமாக ஒப்பந்தங்களைச் செய்துகொண்டுள்ளன. "இந்திய ஏற்றுமதி பரிசோதனைப் பேரவை (EIC) மற்றும் மக்கள் சீனக் குடியரசின் தர மேற்பார்வை, பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தல் பொது நிர்வாகம்: AQSIQ" என்ற தலைப்பிலான ஒப்பந்தம் 2013 மே மாதம் செய்துகொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம EICயும் AQSIQயும் ஒன்று மற்றொன்றை ஏற்றுமதிச் சான்றுப் பத்திரங்களை வழங்கவும் இரு தரப்பினதும் சட்ட தேவைப்பாடுகளுக்கமைய பரிசோதனைகளை நடத்தவும் தகைமைவாந்த அதிகார சபையாக அங்கீகரிக்கிறது.[48]

(இ) இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான உத்தேச விரிவான பொருளாதார பங்குடமை ஒப்பந்தம் (CEPA) MRA களை செய்துகொள்வதற்கான ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது

இந்திய - இலங்கை CEPA 2002 இல் முதலாவதாக முன்மொழியப்பட்டது. இந்த ஒப்பந்தம் தொடர்பான கூட்டு ஆய்வறிக்கையென்று 2003 இல் வெளியிடப்பட்டது. தோழில்நுட்ப பேர்ச்சுவார்த்தைகள் 2005 இல் தொடங்கியது. எனினும், பல இறுதித் திகதிகளையும் கடந்து இன்னும் அந்த ஒப்பந்தம் அமுலாக்கப்படாமலே உள்ளது. கடைசியான இறுதித் திகதி 2008 ஆகும். இந்த ஒப்பந்தம் ஒரு MRA இனை அதன் பின்னிணைப்பாகக் கொண்டிருக்கவிருந்தது. இந்தப் பிற்சேர்க்கை வர்த்தகத்திற்கான இயைந்தொழுகல் தொடர்புபட்ட தடைகளை தீர்ப்பதற்கு இரு நாட்டிற்குமிடையிலான ஒரு MRA, ஒரு முன்னோக்கிய பாதையாகும் என்பதை இரண்டு அரசாங்கங்களும் அங்கீகரித்துள்ளன என்பதை எடுத்துக்காட்டுகிறது.

## 3.2. CAP கள் தொடர்பான ஒரு MRA எவ்வாறு செயற்படும்?

[43] http://commerce.nic.in/MOC/international_trade_agreements.asp

[44] இந்திய குடியரசிற்கும் ஜப்பானுக்குமிடையிலான விரிவான பொருளாதார பங்குடமை ஒப்பந்தம 2001.

[45] இந்திய குடியரசிற்கும் சிங்கப்பூர் குடியரசிற்குமிடையிலான விரிவான பொருளாதார பங்குடமை ஒப்பந்ததின் பின்னிணைப்பு 5B


[46] இந்திய குடியரசின் அரசாங்கத்திற்கும் மலேசிய அரசாங்கதிற்குமிடையிலான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை அமுாக்குவதற்கான ஒப்பந்தம் 2011

[47] இந்திய – கொரிய விரிவான பொருளாதார பங்குடமை ஒப்பந்தம் 2009

[48] இந்திய அரசாங்க வர்த்தக கைத்தெழல் அமைச்சின் இந்திய ஏற்றுமதி பரிசோதனை பேரவைக்கும் மக்கள் சீனக் குடியரசின் தர மேற்பார்வை, பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தல் பொது நிர்வாகத்திற்குமிடையிலான உணவு வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு மற்றும் உணவு உள்ளீடுகள் தொடர்பான ஒப்பந்தத்தின் உறுப்புரை 2. வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு உள்ளீடுகளில் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் உணவு மற்றும் உணவு உள்ளீடுகள் தொடர்பில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் தாவர தனிமைப்படுததல் தொடர்பான சட்டட தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யவும் இவ்வொப்பந்ம் முனைகிறது.

ஒப்பந்த்தில் உள்ளடக்கப்படும் பொருட்களைக் குறித்துரைக்கும் ஒரு MRAஇல் இந்தியாவும் இலங்கையும் கைச்சாததிடும். இந்த ஒப்பந்தத்தில் இனங்கானப்பட்ட பொருட்களை சேதனை செய்வதற்கான CAB களை அங்கீகரிப்பதற்கு இரு நாடுகளிலும் பொறுப்பாகவிருக்கும் அதிகாரசபைகளை இவ்வொப்பந்தம் இனங்காணும். வர்த்தகப் பங்காளரின் தரநியமங்களையும் ஒழுங்குவிதிகளையும் பரிசோதிப்பதற்கு CAB கள் அங்கீகரிக்கப்படும். CAP கள் தொடர்பான ஒரு MRA இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே செயற்படும் விதம் உரு 4 இல விபரிக்கப்படுகிறது.

உரு 4: இந்தியாவிற்கும் இலங்ககைக்குமிடையிலான CAP கள் தொடர்பான ஒரு MRA க்கான உத்தேச கட்டமைப்பு




இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பொருட்களை இலங்கையிலிருந்து ஒரு ஏற்றுமதியாளர் ஏற்றுமதி செய்ய எண்ணினால், அக்குறிப்பிட்ட பொருளுக்கு பிரயோகிக்கப்படும் இந்திய தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவதிகளுக்கு அது அமைவானாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்த ஏற்றுமதியாளர் அப்பொருளை அங்கீகரிக்கப்பட்ட ஒரு CAB னால் (உம்: MRA க்கமைய அங்கீகரிக்கப்பட்ட) சோதனை

செய்விக்கவேண்டும். சம்பந்தப்பட்ட சான்றுப்பத்திரத்துடன் அப்பொருட்கள் இந்தியாவிற்கு அனுப்பிவைக்கப்படும். நுழைவுப் புள்ளியில், இசைவை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு கப்பல் சரக்கும் சோதனைக்குள்ளாகாமல் அவை இந்திய சந்தைகளுக்கு நேரடியாக விடுவிக்கப்படும். இலங்கை சந்தைக்குள் பிரவேசிக்கும் இந்திய ஏற்றுமதிகளுக்கும் இதே நடைமுறை பின்பற்றப்படும். நுழைவுப் புள்ளியில் ஒவ்வொரு வர்த்தகப் பங்காளரினாலும் மேற்கொள்ளப்படக்கூடிய எழுமாறான சோதனைகளின் கால இடைவெளியை ஒப்பந்தம் குறித்துறைக்கலாம்.

கீழே தரப்பட்டுள்ள காரணங்களினால் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையேயான CAPகள் தொடர்பான ஒரு MRA ஒரு சாத்தியமான தீர்வாகும்:

- SLSI க்கும் EIC க்குமிடையிலான தற்போதைய ஒப்பந்தம் இந்திய ஏற்மதியாளருக்கு மட்டும் பயனளிக்கும்பேது, இந்த ஒப்பந்தம் (MRA) 'பரஸ்பர' மானது என்பதோடு, இரு நாட்டு ஏற்றுமதியாளருக்கும் பயனளிக்கும்,
- இரு நாடுகளுக்குமிடையே தரநியமங்களின் இசைவாக்கலை கோரிநிற்கும் ஒப்பந்தங்களைப் போலன்றி, இங்கு நீண்ட, சிரமமான, காலவிரயமான பேச்சுவார்த்தைகள் தவிர்க்கப்படுகின்றன,
- தனிநபர் கம்பனிகளின் BIS வெளிநாட்டு தயாரிப்பாளர் அங்கீகாரம் பெறுவதற்கான செலவு குறைக்கப்படுவதோடு, BIS இன் அங்கீகாரம் பெற முடியாத சிறு மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கு பயனளிக்கும்,
- BIS மற்றும் SLSI தரநியமங்களைத்தவிர, இரு நாடுகளிலும் உள்ள பல்வேறு அதிகாரசபைகளினால் விதிக்கப்படும் வேறு ஒழுங்குவிதிகளுக்கும் ஏற்றுமதியாளர்கள் இயைந்தொழுகவேண்டியுள்ளது. தற்போதைய பொறிமுறை BIS மற்றும் SLSI தரநியமங்கள் சான்றுப்படுத்தலில மட்டுமே கவனஞ் செலுத்துகிறது. வர்த்தகத்திற்கு தேவையற்ற ஒரு தடையாக CAP கள் உள்ளபோது,CAP கள் தொடர்பான ஒரு MRA, சம்பந்தப்பட்ட அனைத்து தரநியமங்களையும் உள்ளடக்கி பரந்ததொரு நோக்கெல்லையைக் கொண்டுள்ளது.

## 3.3. அமுலாக்கதிற்கான பரிந்துரைகள்

CAP கள் தொடர்பான உத்தேச MRA வெற்றிகரமாக அமுலாக்கப்படுவதற்கும் அது வெறுமனே ஒரு பத்திரிகை ஒப்பந்தமாக இல்லாமலிருப்பதற்கும் இந்த ஆய்வு பின்வருவன செய்யப்படவேண்டுமென பரிந்துரை செய்கிறது:

### 3.3.1. உத்தேச CEPA விலிருந்து MRA யைப் பிறித்தெடுத்தல்

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான உத்தேச CEPA விலிருந்து MRA யைப் பிறித்தெடுக்கவேண்டும் என்ற பலமான தர்க்கமொன்றை உருவாக்கும் பல காரணங்கள் உண்டு.

முதலாவதாக, அது "பொருட்களிலான வர்த்தகம்" தொடர்பானதொரு பிரசிசனை என்பதோடு, இரு நாடுகளும் ஏற்கெனவே பொருட்கள் தொடர்பில் சுதந்தர வர்த்தக ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ளன. MRA ஒன்றைச் செய்துகொளவதற்காக CEPA ஒப்பந்தமொன்றைக் கொன்டிருக்கவேண்டிய அவசியமில்லை. இந்தியாவிற்குப் புதிய FTA பங்காளர்கள் இருப்பதனால், விரிவான ஒப்பந்தங்களின் வரையறையின்கீழ் MRA களில் கைச்சாத்திட அது இணங்கியுள்ளது. ஏனெனில், கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் சமகாலத்தில் பொருட்கள், சேவைகள் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றிலான வர்த்தகத்தை உள்ளடக்கின. இதற்கு மாறாக, இலங்கையுடன் இந்தியா ஏற்கனவே சுதந்திர வர்த்தக ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. இந்தியாவின் ஏனைய ஒப்பந்தங்கள்போலல்லாது, உத்தேச இந்திய- இலங்கை CEPA ஒப்பந்தம் தற்போதைய FTA யை சேவைகளையும் மூலதனங்களையும் உள்ளக்கக்கூடியதாக விரிவாக்குவதை நோக்காகக்கொண்டுள்ளது.


இரண்டாவதாக, இவ்விரு நாடுகளும் தம்மிடையே வர்த்தகத்தை விரிவாக்கும் நோக்கில் FTA ஒன்றைச்செய்துகொண்டு வரிச்சலுகைகளை விாவாக்கிக்கொண்டுள்ளன. எனவே, தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுக்கு இயைந்தொழுகளிலிருந்து ஏற்படும் மேலதிக செலவு மற்றும் காலவிரயம் ஆகியவற்றை நீக்குவதற்கு CAP கள் தொடர்பான ஒரு MRA யை அமுலாக்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது இவ்வொப்பந்தத்தின் சொல்லப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கு உதவும்.

மூன்றாவாதாக, இத்துறைகளை மேலும் தாராளமயமாக்குவது தொடர்பாக ஏற்கனவே மேலெழுந்துள்ள சமூக பொருளாதார மற்றும் அரசியல் உணர்வலைகள் காரணமாக சேவைகளையும் முதலீடுகளையும் உள்ளடக்கும் ஒரு விரிவான ஒபபந்தம் மீதான பேச்சுவார்த்தைகள் நீண்டகாலம் எடுக்கும். CEPAமுதன் முதலாக பிரேரிக்கப்பட்டு 12 ஆண்டுகள் ஆகின்றது. எனினும் அந்த ஒப்பநதம் இன்னும் பொறை அடுப்பிலேயே வெந்துகொண்டிருக்கிறது. மாறாக,CAP கள் தொடர்பான MRA அதிகம் தாமதமின்றி அமுலாக்கக்கூடிய,ஒப்பீட்டளவில் ஒரு நேரடியான ஒப்பந்தமாகும். எனவே,CEPA விலிருந்து MRA யைப் பிறித்தெடுப்பது அமுலாக்கலைத் துரிதப்படுத்துவதற்கு உதவுவதோடு, இரு நாடுகளிலுமுள்ள வர்த்தகர்களுக்கு பயனளிக்கும்.

இறுதியாக, ஏற்றுமதிகள்மீது NTB கள் கொண்டிருக்கும் எதிர்மறையான தாக்கமும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு நாடுகளினாலும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளில் நிலவும் பலவீனமும் CEPA ஒன்றைச் செய்துகொண்டு இவ்விரு நாடுகளுக்குமிடையேயான வர்த்தகத்தை மேலும் தாராளமயமாக்குவதினால் ஏற்படும் நன்மைகள் குறித்து இலங்கை ஏற்றுமதியாளர்களை நம்பிக்கை இழக்கச் செய்துள்ளன. எனவே, NTB களை அகற்றுவதற்கு CAP கள் தொடர்பான MRA ஒன்றைச் செய்துகொள்வது போன்ற முன்னெடுப்புகள் FTAகள் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்பவும் CEPA தொடுர்பான ஆக்கபூர்வமான கலந்துரையாடலுக்கான மேலும் உகந்ததொரு சூழ்நிலையை ஏற்படுத்தவும் உதவும்.

### 3.3.2. அமுலாக்கத்திற்கு படிப்படியான அணுகுமுறையொன்றைப் பின்பற்றுக


உரு 5: இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான CAP கள் தொடர்பான MRA ஒன்றிற்கான கட்டம் கட்டமான அணுகுமுறை




MRA யின்அமுலாக்கத்தை துரிதப்படுத்துவதற்கு உரு 5 இல் காட்டப்பட்டவாறு படிப்படியானஅணுகுமுறையொன்றைக் கையாள்வது மிகவும் சிறந்ததாகும். CAB கள் எந்தப் பொருட்களுக்கான இறக்குமதி செய்யும் நாட்டின் தரநியமங்களோடான இசைவை மதிப்பிடுவதற்கான திறனையும் நம்பகத்தன்மையையும் கொண்டிருக்கின்றனவோ, அந்தப் பொருட்களை இவ்வொப்பந்தம் முதலில் உள்ளடக்கும். காலப்போக்கில் மேலும் பொருட்களைச் சேர்த்துக்கொள்வதற்கு நாடுகளுக்கு உதவும் ஏற்பாடுகளை/நெகிழ்வுத் தன்மையை இவ்வொப்பந்தம் கொண்டிருக்கவேண்டும்.

உரு 6 இல் காட்டப்பட்டவாறு, CAP கள் தொடர்பான MRA யின் முதலாவது கட்டத்தை அமுலாக்குவதற்கான ஒரு ஐந்து மாதிரி படிகள் நடைமுறையொன்றை இப்பகுதி சுருக்கமாக விபரிக்கிறது.

உரு 6: இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான ஆசுயு ஒன்றின் படிப்படியான அமுலாக்கமுறை



### படிமுறை 1: முன்னுரிமைப் பொருட்களைத் தெரிவு செய்தல்

இரு நாடுகளும் பெருமளவுப் பொருட்களை ஒன்றுக்கொன்று வாங்கி விற்று வர்த்தகம் செய்கின்றன. எனினும், எல்லாப் பொருட்களுமே CAP களினால் சமஅளவில் மோசமாகப் பாதிக்கப்படுவதில்லை. வர்த்தகத்திற்கு வசதியேற்படுத்துவதிலும் அமுலாக்கத்தைத் துரிதப்படுத்துவதிலும் இவ்வொப்பந்தத்தைப் பயனுறுதிமிக்கதாக்குவதற்கு முன்னுரிமைப் பொருட்களை இனங்காண்பது முக்கியமாகும். முன்னுரிமைப் பொருட்களை இனங்காண்பதற்கு மூன்று எடுகோள்கள் பயன்படுத்தப்படலாம்: (அ) CAP களின் தாக்கம், (ஆ) வரிகளின் தாக்கம் மற்றும் (இ) ஏற்றுமதி சாத்தியவாய்ப்பு.

(அ) CAP களின் தாக்கம்

எந்தப் பொருட்களின் ஏற்றுமதிக்கு CAP கள் ஒரு கணிசமான தடையாக இருக்கின்றனவோ, அந்தப்பொருட்களை ஒரு MRA உள்ளடக்கவேண்டும். இது பல வழிகளில் அளவிடப்படலாம். CAP களின் விளைவாக எந்தப் பொருட்கள் செலவு மற்றும் கால ரீதியாக மிகவும் அதிகமாக பாதிப்புறுகின்றன என்பதை கண்டறிவதற்குப் பின்வருவன தொடர்பான ஆய்வுத் தரவுகள் மற்றும் ஏற்றுமதியாளர்/ இறக்குமதியாளரிடமிருந்தான தகவல்களைப் பயன்படுத்தப்படலாம்.

(ஆ) வரித் தாக்கம்


இது, எந்த அளவிற்கு வரி வர்த்தகத்திற்கு ஒரு தடையாக உள்ளது என்பதைக் குறிக்கும். ஏற்றுமதியாளர்கள் எந்தளவு அதிக வரி செலுத்தவேண்டியுள்ளதோ, அந்தளவு தாக்கமும் அதிகமாக இருக்கும். உதாரணமாக, FTA (சாதக பட்டியலில் உள்ள பொருட்களுக்கான) அல்லது MFN (எதிர்மறை நிரலிலுள்ள பொருட்களுக்கான) வரி 5% த்திற்குக் குறைவானதாகவிருப்பின், அப்போது வரி வர்த்தகத்திற்கு ஒரு கணிசமான தடையாக இருப்பதில்லை. எனவே, வரி தொடர்பான புள்ளிவிபரங்களின் அடிப்படையிலான வரிதாக்கம் பற்றிய ஓர் ஆரம்ப மதிப்பீடு மட்டுமே இறக்குமதிச் சந்தையின் உள்நாட்டு கேள்வி நிரம்பல் நிலைமை மதிப்பீடு ஒன்றினால் சீர்செய்யப்படவேண்டும்.


(இ) ஏற்றுமதி சாத்தியவாய்ப்பு

CAP களின் தாக்கம் மற்றும் வரிகளின் தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் பொருட்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டதும், அவற்றின் ஏற்றுமதி சாத்தியவாய்ப்பை மதிப்பிடுவது முக்கியமாகும். இறக்குமதி செய்யும் நாட்டின் தரநியமங்களுடனான அவற்றின் இயைந்தொழுகலை மதிப்பிடும் பொருட்டு ஏற்றுமதி செய்யும் நாட்டு அரசாங்கங்கள் / CABகள் உபகரணங்கள் மற்றும் பயிற்சி ஆகியவற்றில் முதலீடு செய்யவேண்டியிருக்கலாம். அத்தகைய முதலீடுகளின் செலவானது, கூடிய ஏற்றுமதிகள் என்ற ரீதியில் நாட்டிற்கு கிடைக்கும் பயன்களோடு ஒப்பிட்டு மதிப்பிடப்படவேண்டும். உதாரணமாக, ஒரு பொருளுக்கு மிகவும் குறைந்த ஏற்றுமதிச் சாத்தியவாய்ப்பே இருப்பின், அக்குறிப்பிட்ட பொருளுக்கு வசதியேற்படுத்துவதற்காக தற்போதைய உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் பெருமளவு மூலதனமிடுவது விரும்பத்தக்கதல்ல.

CAP கள் தொடர்பான MRA யின்கீழ் உள்ளடக்கப்படும் முன்னுரிமைப்பொருட்களை மதிப்பிடுவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட எடுகோள்கள் எவ்வாறு கூட்டாகப் பயன்படத்தப்படலாம் என்பதை உரு 7 விளக்குகின்றது.

உரு 7: வர்த்தகத்திற்கான முன்னுரிமைப்பொருட்களின் தெரிவிற்கான எடுகோள்



**படிநிலை 2 மற்றும் 3 : சம்பந்தப்பட்ட CAP களையும் CAB களையும் இனங்காணல்**

தரநியமங்களிலும் ஒழுங்குவிதிகளிலும் உள்ள வேறுபாடுகளின் காரணமாக ஒவ்வாரு நாட்டினதும் இசைவு மதிப்பீட்டுத் தேவைகள்/முறைமைகள் வேறுபடும். எனவே, பொருட்களின் முன்னுரிமைப் பட்டியல் இனங்காணப்பட்டதும் உரிய தர நியமங்கள், ஒழுங்குவிதிகள், மற்றும் ஒவ்வொரு நாட்டிலும் இசைவை மதிப்பிடுவதற்குப் பொறுப்பாக உள்ள அதிகார சபைகள் ஆகியன இனங்காணப்படவேண்டும். இசைவுச் செயற்பாடுகளின் வகைகள் பல்வேறு பொருட்களின் இசைவு மதிப்பீட்டிற்குப் பொறுப்பாகவிருக்கும் நிறுவனங்கள் பற்றிய கண்ணோட்டம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

(அ) இலங்கையில்

அட்டவணை 1: இலங்கையில் உணவுப் பொருட்களுக்குப் பிரயோகிக்கப்படும் தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும்

| | தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் | நிறுவனங்கள் |
|---|---|---|
| எல்லா உணவுப் பொருட்களும் | உணவுச்சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குவிதிகள்<br><br>மற்றும் SLSI யினால் விதிக்கப்பட்ட தரநியமங்கள் | உணவு அதிகாரசபை – சுகாதார அமைச்சு<br><br>மற்றும்ளுடுளுஐ |
| தாவரம் மற்றும் தாவர மூலப்பொருள் | தாவர பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் இறக்குமதி அனுமதிப் பத்திரத்திலுள்ள விசேட பொருட்கள் | தேசிய தாவர தனிமைப்படுததற் சேவை – விவசாய அமைச்சு |
| கால்நடை உற்பத்திகள் | கால்நடை உற்பத்திகளுக்கான இறக்குமதி அனுமதிப் பத்திரத்திலுள்ள விசேட பொருட்கள் | விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் |
| ஏனைய உற்பத்திப்பொருட்கள் | கைத்தொழில்துறைக்கான ஒழுங்குவிதிகள் | உரிய கைத்தொழில் |

(ஆ) இந்தியாவில்

அட்டவணை 2: இந்தியாவில் உணவுப்பொருட்களுக்குபி பிரயோகிக்கப்படும் தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும்

| | தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் | நிறுவனங்கள் |
|---|---|---|
| எல்லா உணவுப் பொருட்களும் | குளுளுயுஐ மற்றும் டீஐளு ஆகியவற்றினால் நிறைவேற்றப்பட்ட தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் | இந்திய தரநியமங்கள் பணியகம் (டீஐளு)<br>மற்றும் உணவு பாதுகாப்பு தரநியமங்கள் அதிகார நிறுவகம் (குளுளுயுஐ) |
| தாவரம் மற்றும் தாவர மூலப்பொருள் | விதைகள், கன்று மற்றும் தாவரப் பொருள் இறக்குமதிக்கு வழங்கப்படும் இறக்குமதி அனுமதிப் பத்திரம் | தாவரப் பாதுகாப்பு, தனிமைப்படுத்தல் மற்றும் களஞசியப்படுத்தல் பணியகம்-விவசாய அமைச்சு |
| கால்நடை உற்பத்திகள் | துாய இறக்குமதி அனுமதிப்பத்தரம் | இந்திய அரசாங்கத்தின் விலங்கு வேளாண்மைத் திணைக்களம் |

**படிநிலை 4 மற்றும் 5: தேவையான ஊயுீ களை மேற்கொள்வதற்கான ஊயுடீ களின்திறனையும் நம்பகத் தன்மையையும் மதிப்பிடுதல் மற்றும் முன்னுரிமைப் பொருட்களுக்கான ஆசுயு அமுலாக்குதல்**

திறன் என்பது தேவையான இசைவு மதிப்பீட்டு நடைமுறைகளை மேற்கொள்வதற்கு இந்தியாவிலும் இலங்கையிலும் உள்ள CAB களின் உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆற்றல் ஆகியவற்றைக் குறிக்கும். நம்பகத் தன்மை என்பது, தேவையான சோதனைகளை/நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கான சம்பந்தப்பட்ட CAB களின் ஆற்றல் மூன்றாம் தரப்பொன்றினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதைக் குறிக்கும்.


ஒரு MRAக்கான கட்டங்கட்டமான அணுகுமுறையதனது, CABகள் எந்தப் பொருளுக்கான இசைவு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான திறனையும் நம்பகத்தன்மையையும் ஏற்கெனவே கொண்டுள்ளனவோ, அந்த முன்னுரிமைப் பொருட்கள் தொடர்பாக வழங்கப்படும் சான்றுப்பத்திரங்களை உடனடியாக ஏற்றுக்கொள்ள நாடுகளுக்கு உதவும். எனவே நாடுகள் அதனைத் தாமதமின்றி அமுல்படுத்த முடியும்.

### 3.3.3. ஒரு ஏற்றுமதிப் பரிசோதனைத் திட்டத்தை / அமைப்பைத் தாபித்தல்

ஓவ்வொரு நாட்டிற்கும் தேசிய தரநியமங்கள் அமைப்பொன்று இருந்தபோதிலும், பொருட்களின் தரங்கள் தொடர்பான சட்ட திட்டங்களும் இசைவிற்கான பரிசோதனைகளும் பெரும் எண்ணிக்கையிலான நிறுவனங்களினால் கையாளப்படுகின்றன. இதன்விளைவாக, பொருள் மற்றும் ஒழுங்குவிதியைப் பொறுத்து, இசைவு மதிப்பீட்டிற்குப் பொறுப்பான நிறுவனங்களும் வேறுபடும். ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்வதில் இது ஒரு பிரச்சினையை உருவாக்குகிறது. ஏனெனில், சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரபீடங்களும் அந்த ஒப்பந்தத்திற்கு ஒரு தரப்பாக இருத்தல் வேண்டும். இசைவுடன் தொடர்புபட்ட சம்பந்தப்பட்ட அனைத்து CAB களுடனும் இணைந்து செயற்படுவதும் இந்நிறுவனங்களால் வழங்கப்படும் சோதனை அறிக்கைகளை/ இசைவு அறிக்கைகளை உறுதிப்படுத்தும் ஓர் அமைப்பாகச் செயற்படுவதுமான ஓர் ஏற்றுமதி பரிசோதனை அமைப்பு (EIB) அமுலாக்கத்தைத் துரிதப்படுத்தவும் ஒப்பந்தத்தின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்தவும் முடியும் (உரு 8 ஐ பார்க்க).

இந்தியா ஏற்கனவே ஒரு EIBயைக் கொண்டுள்ளது. ஏனைய பகணிகளுக்கு மத்தியில் இந்திய ஏற்றுமதிப் பரிசோதனை பேரவை (EIC) நாட்டிலுள்ள ஏனைய சம்பந்மந்தப்பட்ட CAB களுடன் இணைந்து செயற்படுவதோடு,பொருட்கள் இறக்குமதி செய்யும் நாட்டு தரநியமங்களைப் பூர்த்தி செய்கின்றன என்பதையும் சான்றுப்படுத்துகின்றன. EIC, ஏற்றுமதிப் பொருட்களின் தரம் இறக்குமதி செய்யும் நாட்டு தரநியமங்களுகளுக்கு அமைவாக இருப்பதை சான்றுப்படுத்துவதற்குப் பொறுப்பாகவிருக்கும் ஏற்றுமதி பரிசோதனை முகவராண்மைகளை (EIA) வெளியேறும் துறைமுகங்களில் (சென்னை, புதுடில்லி, கொச்சி, கொல்கொத்தா மற்றும் மும்பாய்) பேணுகின்றது. இது, ஏற்றுமதி கூறுகளிலுள்ள தர உறுதிப்பாட்டு முறைகைள் மற்றும் உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமைகள் ஆகியவற்றின்மூலமும் கப்பற் சரக்கு வாரியான பரிசோதனைகள் மூலமும் எய்தப்படுகிறது.

உரு 8: இந்தியவிற்கும் இலங்கைக்குமிடையிலான ஊயுீகள் தொடர்பான ஊயுடீ களின் தொழிற்பாடு



இலங்கையில் EIB ஒன்றைத் தாபிப்பது இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான MRA யின் பயன்மிக்க அமுலாக்கத்திற்கு வசதியேற்படுத்துவது மட்டமின்றி, வேறு பல நன்மைகளையும் வழங்கும்:

- இலங்கை எதிர்காலத்தில் இன்னும் பல நாடுகளோடு FTA களைச் செய்துகொள்ள திட்டமிடுவதால், ஏனைய நாடுகளுடனான MRA களுக்கு EIB வசதியேற்படுத்த முடியும்.
- தனியொரு தொடர்பு மையத்தைக் கொண்டிருப்பது நாடுகளுக்கிடையில் தரநியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பான பூசல்களை விரைவாகத் தீர்ப்பதற்கு உதவும்.
- ஒரு EIB இலங்கை ஏற்றுமதிகளின் தரம் தொடர்பாக இறக்குமதியாளகள்/கொள்வனவாளர்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப உதவமுடியும். ஒரு கொள்வனவாளர் பொருளின் தரம் குறித்து சந்தேகம் கொள்வாராயின், அப்பொருள் கொள்வனவாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்தி சான்றுப்பத்திரமொன்றை வழங்குமாறு அவர்கள் EIB யைக் கோரமுடியம்.
- மோசடியான ஏற்றுமதியாளர்களின் செயல்களினால் பாதிக்கபடுவதிலிருந்து உண்மையான ஏற்றுமதியாளர்களை அது பாதுகாக்கும். உ.ம். பப்பாசிப்பழ விதைகளை மிளகு என ஏற்றுமதி செய்வதை EIB தடுக்கமுடியும்.
- LFVPPEA வில் நடைபெற்ற கவனக் குவிப்பு குழு கலந்துரையாடலில் வெளிப்படுத்தப்பட்டவாறு, அவ்வப்பொருளுக்குரிய பரிசோதனை திட்டத்தை இலங்கை ஏற்கனவே கொண்டிருக்கிறது. உ.ம் சிலோன் டீ, இலங்கை தேயிலைச் சபையும் மற்றும் சிலோன் கறுவாவும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும். தற்போதுள்ள திட்டங்கள் இப்பொருட்களின் இலங்கை தயாரிப்பை மேம்படுத்த உதவுவதை நோக்காகக் கொண்டவை. அதே போன்று, ஏனைய பொருட்களுக்கான EIB ஒன்றைக் கொண்டிருப்பது அப்பொருட்களுக்கான வர்த்தக குறியீட்டு நன்மதிப்பை கட்டியெழுப்ப உதவும்.

எனினும், அத்தகையதொரு பரிசோதனைத் திட்டம் தன்னிச்சையானதாகவும் கேள்வியால் உந்தப்படுவதாகவும் இருத்தல் முக்கியமாகும். அது பெறுமதி வழங்குவதாக இருப்பதோடு, ஏற்றுமதிகளுக்கான இன்னொரு அதிகாரத்துவத் தடையாக இல்லாதிருந்தால் மாத்திரமே ஏற்றுமதியாளர்கள் அத்தகையதொரு திட்டத்தை பயன்படுத்துவார்கள். ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின்மீதான கொள்வனவாளர்களின் அதிகரித்த நம்பிக்கை, ஏற்றுமதிக் கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களின் மேம்படுத்தப்பட்ட ஆற்றல், நுழைவுத் துறைமுகத்தில் இசைவுப் பரிசோதனைகளின் காரணத்திலான குறைந்த செலவு மற்றும் தாமதங்கள் ஆகிய அனைத்தும் கப்பலேற்றலுக்கு முன்னர் பரிசோதனைகுள்ளாகும் ஏற்றுமதியாளரின் விருப்பத்தைத் தீர்மானிக்கும் காரணிகளாகும். கப்பல் சரக்கு தமது எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதை உறுதிப்படுத்த நேரடியாக இம்முகவராண்மையிடமிருந்து சான்றுப்பத்திரமொன்றைக் கோரக்கூடிய இறக்குமதியாளர்/ கொள்வனவாளருக்கும் இச்சேவையை விரிவாக்க முடியும்.

உலக சந்தையில் செலவு ரீதியில் இனியும் போட்டியிடமுடியாத ஒரு நாடு என்ற வகையில் ஏற்றுமதிகளை நிலையாகப் பேணுவதற்கும் கொள்வனவாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கும் இலங்கைப் பொருட்களின் தரமும் வர்த்தகக் குறியீட்டின் நன்மதிப்பும் மிகவும் முக்கியமானவையாகும். இந்த விடயத்தில் ஒரு EIB முக்கியமானதொரு பங்கு வகிக்கமுடியும். ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB) போன்ற ஏற்றுமதி அபிவிருத்தி முகவராண்மைகளின் வகிபாகம் குறித்து இலங்கை மீளச் சிந்திப்பதற்குரிய காலம் இதுவாகும். ஏறறுமதிகளுக்குப் புத்துயிரளிக்கவும் அவற்றின் திறனையும் முறைமையையும் மேம்படுத்தவும் EDB விற்கு இத்தகைய புதிய பொறுப்புகளை ஒப்படைப்பது அவற்றின் நம்பகத்தன்மையையும் பயன்மிக்கதன்மையையும் மேம்படுத்தும்.

# முடிவுரை

NTB கள் வர்த்தகத்திற்கான கணிசமானதொரு தடங்கலாகும். எனவே, இயன்றவிடத்து இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பது இலங்கைக்கு முக்கியமாகும். நீண்ட மற்றும் செலவுமிக்க CAP கள் காரணமாக எழும் இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTB கள்மீது இவ்வறிக்கை முக்கிய கவனம் செலுத்துகிறது. ஒரு நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் அந் நாட்டில் பிரயோகிக்கப்படும் தரநியமங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைவாக இருப்பதை உறுதிப்படுத்துமுகமாக எல்லா நாடுகளினாலும் CAP கள் பயன்படுத்தப்படுகின்றன. நுகர்வோர், சூழல் மற்றும் தாவர மற்றும் விலங்கு வாழ்வைப் பாதுகாத்தல் போன்ற பொது கொள்கை இலக்குகளை அடைவதற்கானதொரு முக்கியமான மார்க்கமாக தரநியமங்களும் ஒழுங்குவிதிகளும் இருக்கின்ற அதேவேளை, இந் நடவடிக்கைகளோடு தொடர்புபட்ட இயைந்தொழுகலை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படும் நடைமுறைகளினால் ஏற்படும் செலவும் எடுக்கும் காலமும் நியாயமற்றவையாக இருப்பின் அது வர்த்தகத்திற்கான ஒரு தடையாக மாறிவிடும்.

இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்வதில் அனுகூலமான போட்டித்தன்மையிருந்தும் இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTB கள் எவ்வாறு ஏற்றுமதியைப் பாதிக்கும் என்பதை எடுத்துகாட்டுவதற்கு இவ்வறிக்கை இந்தியாவிற்கான உணவு ஏற்றுமதி விடயத்தை பயன்படுத்துகிறது. மேலும், இவ்விரு நாடுகளும் பின்னர் 2002 இலும் 2006 இலும் ஒப்பந்தங்கள் செய்துகொண்டிருந்தபோதிலும், இலங்கை ஏற்றுமதியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முறையாகத் தீர்க்க இவ்வொப்பந்தங்கள் தவறுகின்றன.

இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTB கள் உணவுப்பொருள் வர்த்தகத்திற்கு மட்டும் உரிய ஒரு தடங்கலோ அல்லது இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான வர்த்தகத்திற்கு மட்டும் உரிய ஒரு தடங்கலோ அல்ல. இத்தடையை வெற்றிகொள்வதற்கு ஏனைய நாடுகளினால் பல நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றன. WTO ஒப்பந்தங்களினாலும் முன்மொழியப்படுகின்றன. இந் நடவடிக்கைகளை இவ்வாய்வு பகுப்பாய்வு செய்து, இசைவு மதிப்பீட்டு நடைமுறைகளிலான (CAP கள்) ஒரு பரஸ்பர அங்கீகரிப்பு ஒப்பந்தத்தை (MRA) இந்த NTB களுக்கான ஒரு தீர்வாக முன்மொழிகின்றது. அங்கீகரிக்கப்பட்ட, அதிகாரபூர்வ மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடங்களினாலும் பரிசோதனை நிலையங்களினாலும் வழங்கப்படும் இறக்குமதி செய்யும் நாட்டின் தர நியமங்களுடனான இசைவுச் சான்றிதழை தரப்பினர் ஏற்றுக்கொள்வதற்கு இணங்கும் ஒரு ஒப்பந்தமே MRA ஆகும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இறக்குமதி செய்யும் வர்த்தகப் பங்காளரின் தர நியமங்களோடும் ஒழுங்குவிதிகளோடுமான ஏற்றுமதிப் பொருளின் இசைவை தமது நாட்டிலுள்ள பரிசோதனை நிலையங்களினால் நாடுகள் சோதித்துக்கொள்ள முடியும். அதன் பின்னர், அந்த நாடு, உரிய சான்றுப் பத்திரத்துடன் அப் பொருட்களை அனுப்பிவைக்கலாம். அப் பொருட்கள் ஒவ்வொரு கப்பற் சரக்கும் நுழைவுப் புள்ளியில் மேலும் சோதனைக்கு உள்ளாகாமல் விடுவிக்கப்படும்.

ஏற்கனவே அடித்தளமிடப்பட்டுள்ள CAP கள் தொடர்பான ஒரு MRAதான் CAP கள் காரணமாக ஏற்படும் NTB களுக்கான மிகச் சாத்தியமான தீர்வாகும். CAPகள் தொடர்பான MRA எண்ணக்கரு இந்தியாவிற்கு ஒரு புதிய தீர்வல்ல. இந்தியா அதன் மிக அண்மைக்கால ஒப்பந்தங்களில் MRAவிற்கான ஏற்பாடுகளை ஏற்கனவே கொண்டிருக்கிறது. மேலும், இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான உத்தேச CEPA வும் MRAவிற்கான ஏற்பாடுகளை கொண்டிருக்கிறது. இயைந்தொழுகல் தொடர்புபட்ட NTBகளை வெற்றிகொள்ள வேறு பல நாடுகளினாலும் அது பிரயோகிக்கப்படுவது அதற்குச் சார்பான வாதத்திற்கு வலுவூட்டுகிறது. இலங்கை இந்தக் கைக்கெட்டிய கனியிலிருந்து பயன்பெறவேண்டும்.

எனினும், MRA இல் கைச்சாத்திடுவது மாத்திரம் போதாது என்பதைக் கவனத்திலெடுப்பது முக்கியமாகும். தேவைப்படும் பரிசோதனைகளை நடத்துவதற்கான தமது பங்காளி நாட்டு பரிசோதனை நிலையங்களின்

திறனிலும் நம்பகத்தன்மையிலும் நாடுகள் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடியதாகவிருப்பது முக்கியமாகும். இந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்புமுகமாக அரசாங்கம் கவனத்திலெடுக்கக்கூடிடய சில நடவடிக்கைகள் உள்ளன:

i) உத்தேச CEPA விலிருந்து CAP கள் தொடர்பான MRA யை பிரித்தெடுத்தல்,
ii) கட்டங்கட்டமான ஒரு அடிப்படையில் MRA யை அமுலாக்குதல்,
iii) இலங்கை ஆய்வுகூடங்கள் மற்றும் பரிசோதனை நிலையங்கள் ஆகியவற்றின் திறனைக் கட்டியெழுப்புதல்
iv) ஏற்றுமதி இறக்குமதி பரிசோதனை திட்டத்தை/ அமைப்பைத் தாபித்தல்.

குறிப்பாக இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளில் பாக்கு நீரிணையின் இரு பக்கங்களுக்குமிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு ஒரு MRA நல்லதொரு வாய்ப்பினை வழங்குகிறது. இந்திய துறைமுகங்களிலிருந்து இலங்கைப் பொருட்களை விடுவிப்பதற்கு வசதியேற்படுத்துவது இந்தியாவை ஒரு சாத்தியவாய்ப்பு மிக்க பிரதான ஏற்றுமதிச் சேர்விடமாக பார்ப்பதற்கு உள்நாட்டு தனியார்துறையினரை இணங்கவைப்பதோடு, உத்தேச CEPA வில் எதிர்பார்க்கப்படுவதுபோல் மேலும் ஒருங்கிணைப்புக்கான ஆதரவையும் பெற்றுத் தரும். அது, எதிர்கால இருதரப்பு வர்த்தக முன்னெடுப்புகளில் இந்திய கொள்கை வகுப்பாளர்களிடமிருந்தும் சட்டத்துறை அதிகாரிகளிடமிருந்தும் மேலும் ஒத்துழைப்பையும் ஊக்குவிக்கும்.